இலங்கையில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது:


# தொழிலாளர் பாதை

2/-

● மாதமிரு இதழ் — 416 ● 1992 ஜனவரி 27 திங்கட்கிழமை

University of Jaffna Sri Lanka
RECEIVED
1992-3-1
Periodicals Division
Library

வொர்குட்டா சுரங்கத் தொழிலாளர்களை ஆதரியுங்கள்



விபரம்

10ம் பக்கம்

# தோட்ட பகுதி பயங்கரங்களுக்கு முற்றுப்புள்ளி வை!

## இ. தொ. கா - நவசமசமாஜ காட்டிக் கொடுப்புக்களுக்கு இடமளியாதே!

தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக யூ. என். பி. அரசாங்கத்தின் தலைமையில் முதலாளி வர்க்கம் கட்டவிழ்த்துவிட்டுள்ள இனவாத அரச ஒடுக்குமுறை இயக்கத்தினையும் அதனுடன் இணைந்து சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ, இ.தொ.க. தலைமைகள் கடைப்பிடிக்கும் கேவலமான துரோகத்தினையும் முழுத் தொழிலாள வர்க்கத்துக்கும் எதிரான ஒரு அபாய அறிவிப்பாகக் கொள்ளும்படியும், அதனை எதிர்த்துக் கிளர்ந்து எழும்படியும் புரட்சிக் கம்யூனிஸ்ட் சழகம் தொழிலாள வர்க்கத்தினை வேண்டுகின்றது,

இந்த ஆத்திரமூட்டும் இயக்கத்தில் பொலிசாரால் கைது செய்யப்பட்ட லுணுகலை அடவத்த தோட்டத்தைச் சேர்ந்த அந்தனி கிறிஸ்தோபர் (23வயது) என்ற தொழிலாளி பொலிஸ் தாக்குதலில் காயமடைந்து ஆஸ்பத்திரியில் மரணமடைந்துள்ளார். கடும் தாக்குதலைத் தொடர்ந்து இவர் 'விடுதலை' செய்யப்பட்டு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்தார்.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் கனவரல்ல பகுதித் தோட்டங்களில் ஆயுதங்கள் கண்டு பிடிக்கப்பட்டதாயும், விடுதலைப் புலிகள் தோட்டத் துறையில் ஊடுருவியுள்ளதாயும் யூ. என். பி. அரசாங்கமும் முதலாளித்துவ பத்திரிகைகளும் பெரும் இனவாதப் பிரச்சாரத்தைத் தூண்டிவிட்டன. இந்த ஆத்திரமூட்டும் இனவெறிப் பிரச்சாரம் ஜனவரி நடுப்பகுதியில் ஹிந்தகல தோட்டத்தில் ஆயுதம் தாங்கிய கும்பல் பணத்தைச் சூறையாடியதாகக் கூறப்படும் சம்பவத்தினைத் தொடர்ந்து உச்சக்கட்டத்தை அடைந்தது.

யூ. என். பி, அரசாங்கத்தின் கொலைகார'கொமாண்டோ' அதிரடிப் படைப் பிரிவு பொலிஸ் அதிபர் கருணாரத்ன என்பவர் தலைமையில் ஊவா மாகாணத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. இப்படையினர் பொலிசாரினதும் உதவியுடன் தோட்டங்களை சுற்றி வளைத்துத் 'தேடும்' நடவடிக்கையில் ஈவிரக்கமற்ற தாக்குதல்களில் ஈடுபட்டதோடு கைது செய்தல்களிலும் இறங்கினர். ஹிந்தகல, பல்லகட்டுவ, ஸ்பிரிங்வலி பகுதிகளில் கைதுசெய்த பெருந்தொகையான தொழிலாளர்கள் எஸ்-லோன் பைப் தாக்குதல்களின் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்,

கடந்த சில வாரங்களாக இடம்பெற்ற தேடுதல்களில் கைது செய்யப்பட்ட சுமார் 200 தொழிலாளர்களில் 49 பேர் இன்னமும் சிறைவைக்சப்பட்டுள்ளனர். இவர்களில் 40 பேர் மகசின் சிறைச்சாலையிலும் 9பேர் பதுளை விசேட தடுப்பு முகாமிலும் சிறை வைக்கப்பட்டுள்ளனர். இங்ஙனம் கைது செய்யப்பட்டுள்ளவர்களில் நால்வர் பெண்கள், அநேகர் வேலையற்ற தோட்டத்தொழிலாளஇளைஞர்கள். 7 ஆசிரியர்களும் இவர்களில் அடங்குவர்.

மகசின் சிறையில் வைக்கப்பட்டுள்ள ஒருவரின் முதுகெலும்பு முறிந்துள்ளதோடு மேலும் இருவர் கடும் சுகவீனமுற்ற நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த தேடுதல் நடவடிக்கைகள் யூ. என். பி. அரசாங்கத் தலைவர்களும் முதலாளித்துவ இராணுவ, பொலிஸ் பிரிவுகளின் தலைவர்களும் கூடி ஆராய்ந்து வரைந்த திட்டத்தின்படியே இடம்பெற்று வருகின்றது. முதலாளித்துவ ஆங்கிலப் பத்திரிகை செய்தியின்படி ஊவா மற்றும் அயல் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் 'கூட்டு நடவடிக்கை ஆணையிடும் தலைமைக்காரியாலயத்தில்' 'பாதுகாப்பு நிலைமை' பற்றி கலந்துரையாடியுள்ளனர். இந்த அரச ஒடுக்குமுறையுடன் சேர்ந்து தோட்டப் பகுதியின் அயல் கிராமங்களில் 'புலிகள்' தாக்குதல் நடாத்தப் போகின்றனர் என்ற ஆத்திரமூட்டும் பிரச்சாரமும் கட்டவிழ்க்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சிங்களக் கிராமவாசிகளுக்கும் தோட்டத் தொழிலாளருக்கும் இடையே மோதுதலைத் தூண்டிவிடுவதே முதலாளித்துவப் பிற்போக்குச் சக்திகளின் நோக்கம். அரசாங்க, தனியார் முதலாளித்துவப் பத்திரிகைகள் இந்த நாற்றமெடுந்த பிரச்சாரத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இந்த விதத்தில் எமது சகோதர ஏடான 'கம்கறு மாவத்த' அதன் ஜனவரி இறுதி வார இதழில் குறிப்பிட்டது போல் ''அரச ஒடுக்குமுறையும் இனவாதமும் தூண்டிவிடப்பட்டுள்ளதற்குக் காரணம் தனியார்மயமாக்கம், மூடுவிழாக்கள் மூலம் இலட்சக்கணக்கான தொழில்களை நாசமாக்குவதும் வாழ்க்கைத்தரம், சம்பளம், சேவை நிலைமைகள், உதவிமானியங்களை வெட்டுவதும் அடிப்படை ஜனநாயக உரிமைகளை நாசமாக்குவதும் ஏகாதிபத்திய காலனித்துவ சுரண்டல்களை தொழி

(9-ம் பக்கம் பார்க்க)

## கொக்கட்டிச்சோலை ஆணைக்குழு இடைக்கால அறிக்கை:

# கொலைகளுக்கு இராணுவமே பொறுப்பு

கடந்த ஜூனில் கொக்கட்டிச் சோலையில் இடம்பெற்ற பொதுமக்கள் படுகொலைகளுக்கு இலங்கை இராணுவமே பொறுப்பு என அது பற்றி விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு தனது இடைக்கால அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

ஜனவரி 29ல் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்ட இந்த அறிக்கையினால் ''67 பொது மக்களின் படுகொலைக்கு கொக்கட்டிச்சோலையில நிலை கொண்டிருந்த இராணுவத்தினரே பொறுப்பு' என்ற உண்மையை மறுக்க முடியாது போனாலும் அதனைத் தமிழ் தேசிய ஒடுக்கப்படும் மக்களின விடுதலைப் போராட்டத்துக்கு எதிரான பிரேமதாச அரசாங்கத்தின் ஒரு 'இராணுவ நடவடிக்கையின விளைவு அல்ல' என ஸ்தாபிதம் செய்ய முயன்று கொண்டுள்ளது.

கொக்கட்டிச்சோலைப் படுகொலைகளுக்கும், தீவைப்புக்களுக்கும், சற்பழிப்புக்களுக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு குறிப்பிடுவது போல் திடீர் 'ஆத்திரமூட்டலால்' ஏற்பட்ட 'கட்டுப்பாட்டை மீறிய' செயலே காரணம் என்பதை அங்கீகரிப்பதானது, முதலாளித்துவ ஒடுக்குமுறை இனவாத அரசின் நான்கு தசாப்தங்களுக்கும் மேலான வரலாற்றினையே குழிதோண்டிப் புதைப்பதாகும்.

இந்த ஆணைக்குழு பற்றி எதுவித சலனங்களுக்கும் இடமளிக்காத விதத்தில் நாம் அன்று கூறியதாவது: ''...உண்மையில் கொக்கட்டிச்சோலை படுகொலைகள் இனவாத யுத்தம் ஆரம்பமாகி ஓராண்டு பூர்த்தியான தினத்தன்றே (12/6/91) இடம்பெற்றுள்ளது. ஒரு தசாப்தத்துக்கு மேலாக இந்த யூ. என். பி. அரசாங்கம் நடாத்தி வரும் இனப்படுகொலைகளுள் அதிக எண்ணிக்கையிலான மக்களின் உயிர்களைப் பலிகொண்ட தனிச் சம்பவம் இதுதான். உண்மையில் இப்படுகொலைகள் தமிழ் விடுதலைப் போராட்டத்தினைச் சிதறடிக்கும் ஒரு நடவடிக்கையாக கிழக்கில மக்களின் கொதிப்பு உச்சக் கட்டத்தினை அடைந்துள்ள ஒரு கட்டத்தில் இடம்பெற்றுள்ளது.''

('தொழிலாளர் பாதை'-1991 ஜூலை 12)

இந்த இடைக்கால அறிக்கையின முடிவுகளை வைத்து எதும் நடவடிக்கை எடுக்கப்படுமா? என்ற பத்திரிகையாளர்களின் கேள்விக்கு, அது 'நீதித்துறை அதிகாரிகள் சம்பந்தப்பட்ட விடயம்' என அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தட்டிக் கழித்துள்ளார். ஏற்கனவே உள்ள ஒடுக்குமுறை அரச சட்டதிட்டங்களுக்கு மேலதிகமாக ஆயுதப் படைகளின 'மேலதிகங்களுக்கு' பாதுகாப்பு வழங்கும் பொருட்டு யூ. என். பி. அரசாங்கம் 'தண்டனை விலக்களிப்புச் சட்டத்'தை நிறைவேற்றிக் கொண்டுள்ளது. இதன் கீழ் ஆயுதப் படைகளின் அட்டூழியங்களுக்கு பூரண பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

'இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மகாநாடு பெப்ரவரி 7ம் திகதி ஆரம்பமாக இருந்த வேளையில் இலங்கையில் 'மனித உரிமை மீறல்கள்' சம்பந்தமாக எழுப்பப்படும் பிரச்சினைகளை பூசி மெழுகவும் இலங்கையில் பிரேமதாசா அரசாங்கம் அடிப்படை உரிமைகளை பேணுகின்றது என்ற நற்சான்றிதழை அமெரிக்க வெளிநாட்டு அமைச்சிடம் இருந்து எடுத்துக்கொண்டு செல்லவும் இந்த கொக்கட்டிச்சோலை இடைக்கால அறிககை திடீரென கையளிக்

(9-ம் பக்கம் பார்க்க)

## வடக்கு — கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்று!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏகாதிபத்திய தலையீட்டுக்கு நவசமசமாஜ சந்தர்ப்பவாதிகள் அழைப்பு

— கே. ரத்னாயக்க

யூ. என். பி. அரசாங்கம், முதலாளித்துவ சிறிலங்கா சுதந்திர கட்சி மற்றும் இனவாதிகள் தொழிலாள வர்க்கத்தையும் ஒடுக்கப்பட்ட மக்களையும் பிளவுபடுத்தி அடக்கும் இலக்கில் மற்றுமோர் தமிழர் விரோத இனவாத இயக்கத்தைத் தூண்டிவிட்டுள்ளது. இதில் பங்குபற்றியுள்ள நவசமசமாஜ சந்தர்ப்பவாத துரோகிகள், ஏகாதிபத்திய தலையீட்டின் அவசியம் பற்றிய பிரச்சாரத்தையும் முன்வைத்துள்ளனர்.

முதலாளித்துவ வர்க்கத்தின் தற்போதைய இனவாத ஆத்திரமூட்டல்களுக்கு சகுனமாயுள்ளது, யூ. என். பி. அரசாங்க அமைச்சரும் இ. தொ. கா. தலைவருமான தொண்டமான் சமர்ப்பித்துள்ள வடக்கு—கிழக்கு யுத்த நிறுத்த யோசனைகளாகும். இரண்டு பிரதேசங்களையும் இணைக்கவும் அதற்குள் முஸ்லீம் மக்களுக்கு ஓர் பிரிவை வழங்கவும் தெரிவித்துள்ள மோசடி யோசனைகளின் பேரில் யாழ்ப்பாணம் செல்லவும் விடுதலைப்புலிகளுடன் கலந்தாலோசிக்க உள்ளதாயும் தொண்டமான் கூறியுள்ளார். திரைமறைவிலிருந்து இந்த யோசனைகளைக் குலைக்க ஜனாதிபதி பிரேமதாசா நாடெங்கும் இனவாதத்தை தூண்டும் கொலைகார தேவையுடன் இறங்கியுள்ளார். தனியார்மயமாக்கம், வாழ்க்கைதர அழிப்பு, தொழில்அழிப்பு உள்ளடங்கலான ஏகாதிபத்திய பாணி வேலைத்திட்டங்களுக்கு எதிராக பலத்த எதிர்ப்பு எழுந்துள்ள இவ்வேளையில் தொழிலாளர் ஒடுக்கப்பட்ட மக்களை பிளவுபடுத்தி அடக்குவதே இந்த இனவாதஆத்திரமூட்டலின் இலக்காகும். அதிலும் மேலாக அதன் முக்கிய நோக்கம் இலட்சக்கணக்கான தமிழ்பேசும் தோட்ட தொழிலாளரை இனவாத ஆத்திரமூட்டல்களுக்கு இலக்காக்கி அச்சுறுத்தி தனியார்மயமாக்கல் திட்டங்களை பூரணப்படுத்துவதும் இலட்சகக்ணக்கான தொழிலாளரை தோட்டங்களிலிருந்து விரட்டி அடிப்பதுமேயாகும்.

நவசமசமாஜ துரோக தலைமைகள் கும்பல் இந்த எதிர்ப்புரட்சிகர தேவையினால் தூண்டப்பட்டு ''புலிகளுக்கு நாட்டை பிரித்து கொடுக்கப் போகிறார்கள்'' என்ற நச்சுத்தனமான இனவாத பிரசாரத்தினை நடத்திய வண்ணம் இதில் பங்கு கொண்டுள்ளது. இந்த தலையீட்டின் எதிர்ப் புரட்சிகர தன்மை எத்தகையது தெரியுமா? நவசமசமாஜிகள் சிங்கள மொழியில் வெளியிடும் பிரசுரங்களில் ''புலிகளிடம் அதிகாரத்தை ஒப்படைக்கப் போவதாக' குரைக்கும் அதே சமயம், ஆங்கில, தமிழ்மொழிகளில் தாம் தொண்டமானின் தீர்மானங்களை ஆதரிப்பதாகக் கூறிக்கொள்கின்றனர்.



ந. ச, ச. க செயலாளர் விக்கிரமபாகு கருணாரத்ன

சிங்கள மொழியில் வெளிவரும் நவசமசமாஜ கட்சி பத்திரிகை ''ஹரய'' சிங்கள இனவாதிகளது ஊதுகுழலாக செயற்படும் அதே சமயத்தில் ஆங்கில மொழி 'ஐலண்ட்' பத்திரிகைக்கு (டிசம்பர்29ம் தேதி) நவசமசமாஜ தலைவர் வாசுதேவ நாணயக்கார அளித்த பேட்டியில் ''எம்மை பொறுத்தமட்டில் (தொண்டமான்) அவரது யோசனைகளை ஏற்பது தொடர்பாக எந்த முரண்பாடும் எழாது'' என வஞ்சகமாகக் கூறியிருப்பதைக் காணலாம்.

## தோட்ட தொழிலாளருக்கு எதிரான ஆத்திர மூட்டல்

யூ. என், பி, சி. ல. சு. க. மற்றும் முதலாளித்துவ கும்பல்களது ஆத்திரமூட்டல் இயக்கத்தினை மேலும் முன் எடுத்து செல்வதில் நவசமசமாஜ துரோக சந்தர்ப்பவாத கும்பல் இணைந்துள்ளது. தனியார்மயமாக்கலின் போது தோட்டங்களை விலைக்கு வாங்கவுள்ள கம்பனிகளில் தமிழ்நாடு முருகப்பா கம்பனியும் ஒன்றாகும். இனவாத பிரசாரத்தில் முன்னணியில் நிற்கும் 'தஐலண்ட்' பத்திரிகை டிசம்பா 15ம் திகதி இது பற்றி பின்வருமாறு குறிப்பிட்டது:- ''தங்க நோட்டுகளை பெற்றுதரும் விசாலமான நிலப்பகுதியை இந்திய விவசாய கம்பெனிகளிடம் ஒப்படைப்பதின் அர்த்தம் அரசியல் குருடனுக்கும் கூட விளங்கும். சிங்களவரால் தமது சொந்த மண் எனக் கருதப்படும் பகுதிகளில் இந்திய பரம்பரை கொண்ட தோட்ட தொழிலாளரை குடியமர்த்துவது பற்றி- விசேடமாக சிங்கள மக்களிடையே உணர்ச்சிகளை தூண்டிவிட்டுள்ளது. தோட்ட தொழிலாளரும் பரம்பரை பரம்பரையாக தொடர்ந்து அடிமை தன்மையுடன் தோட்டதுறை தமது பரம்பரையான தாய்நாடு என கருதுகின்றனர்...''

முதலாளித்துவ இனவாதி எதற்கு அத்திவாரமிடுகின்றான் என்பதை 'அரசியல் குருட்டுதனமில்லாத' எந்தவொரு தொழிலாளியாலும் விளங்கிக் கொள்ள முடியும் ஏகாதிபத்திய வாதிகளுக்கு பங்கு கொடுத்தல் தமிழ் முதலாளிகளுடன் மரபுரீதியான பங்கு போடும் போட்டி தோட்ட தொழிலாளருக்கெதிரான ஆத்திரமூட்டலை தூண்டும் முதலாளியின் தேவை என்பதை உடன் புரிந்து கொண்ட விக்ரமபாகு கருணாரத்ன, வாசுதேவ நாணயக்கார ''ஐலண்ட்'' இன் தலையங்கத்தை சிங்களத்தில் தமக்கு பொருந்துமாறு தயாரித்து' (டிசம்சர் 27) 'ஹரய' பத்திரிகையில் பின்வருமாறு பிரசுரித்தனர்.


''தோட்டத்துறையை விழுங்க முயலும் முருகப்பாவுக்கு எதிர்ப்பு. இந்திய தமிழ்நாட்டின் பெரும் கம்பனியான முருகப்பன் கம்பனி தோட்டத்துறையில் பெரும்பகுதியைபெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்து வருவதற்குகெதிராக பல பகுதியிலும் எதிர்ப்பு பரவியுள்ளது. முருகப்பா போன்ற கம்பனிகள் இங்ஙனம் அரசியல் பொருளாதர அதிகாரம் பெறுவதைப்பற்றிக் கவனியாமல், தனியார்மயப்படுத்துவதால் எழும் பாரதூர விளைவைபற்றிமுன்னைநாள் கல்வி, உயர்கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி மாவனல்ல கருத்தரங்கில் கூறியுள்ளார்.

''இந்த கருத்தரங்கில் பேசிய ந.ச.ச.கட்சித் தலைவரான தோழர்விக்கிரமபாகுகருணாரத்ன, தனியார்மயமாக்கலுக்கு ஆதரவளிப்பவர்கள் அதனால் விளையும் ஜனநாயகபிரச்சினைகள்பற்றி தலையிட வேண்டியுள்ளதை விளக்கினார்.''

## வஞ்சகமான உத்தி

நவசமசமாஜ தலைவர்கள் முதலாளித்துவ இனவாத பிரச்சாரத்தில் பங்குபற்றிவரும் அதேவேளையில் ஏகாதிபத்திய தலையீட்டுக்கான பிரச்சாரத்தையும் நடத்துவது தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமையை வழங்குதல் 'சுயாதிபத்தியம்,' மனித உரிமைகளை பேணல் ஆகிய வஞ்சக உத்திகளில் ஈடுபட்டுள்ளனர். ஏகாதிபத்திய வாதிகளால் மட்டுமே தமிழ்மக்களுக்கு சுயாதீனம் வழங்கமுடியும் ஆகையால் அத்தகைய ஏகாதிபத்திய தலையீட்டுக்கு உடனடியாதரவு வழங்க தாங்கள் தயார் என நவம்பர் மாதம் நடந்த ந. ச. ச. கட்சி சம்மேளன அரசியல் தீர்மானம் குறிப்பிடுகின்றது. ஏகாதிபத்திய வாதிகளை இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு வழங்குமாறு மீண்டும் நிர்ப்பந்திக்கும் இந்த ந. ச. ச. கட்சி [illegible] சார்பு முதலாளிகளால் தீர்வு வழங்க முடியாது என்றும் ஏகாதிபத்தியத்தினால் முடியும் எனவும் வலியுறுத்துகின்றனர். ''ஏகாதிபத்தியதலையீட்டினால் புரட்சிகர நிலைமையை நோக்கி தள்ளப்படலாம்'' என்ற பேச்சிலிருந்து ஏகாதிபத்திய தலையீட்டினை தொழிலாள- ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராகத் தள்ளிவிட இச்சந்தர்ப்பவாதிகள் எண்ணியுள்ளமை புரிகின்றது. 1987 யூலையில் இந்திய- இலங்கை ஒப்பந்தம் திணிக்கப்பட்டபோது, இந்தியப்படை ஆக்கிரமிப்புக்கு சாதகமாக பேசிய விக்கிரமபாகு கருணாரத்ன அது மேற்கத்திய ஏகாதிபத்தியவாதிகளுக்கு ஓரடி,' 'முற்போக்கு நடவடிக்கை' என வக்காலத்து வாங்குகிறார்.

இந்த இரத்தம் தோய்ந்த காட்டிக்கொடுப்பு அம்பலமாகியதைத்தொடர்ந்து ஐக்கிய சோசலிச முன்னணி எனும் முதலாளித்துவ முன்னணியின் கொள்கை, முன்நோக்குகளுக்கு இணங்கும் அவசியம் ஏற்பட்டதால் ந.ச.ச.கட்சி இந்தியப்படையை வரவழைக்க இணங்கியதாக நாணயக்கார 'ஐலண்ட்' பத்திரிகை பேட்டியில் குறிப்பிட்டுள்ளார். வடக்கு-கிழக்கில் இந்தியப்படை கிளர்ச்சியை அடக்க பாவிக்கப்பட்ட போது ஏனைய பகுதிகளில் ஏகாதிபத்திய பாணி வேலைத்திட்டங்களைமுன்னெடுக்கும்இரத்தக்களரிகளை சிருஷ்டிக்க ஜயவர்த்தனா-பிரேமதாச அரசாங்கங்களுக்கு ந,ச.ச.கட்சி சந்தர்ப்பவாதிகளது பக்கபலம் கிடைத்தது. இது அவர்களது எதிர்ப்புரட்சிக் கொள்கை ரீதியிலான உபாயத்தினாலேயேயாகும்.



வடக்கில் போரிடும் யூ. என். பி. அரசாங்கத்தின் இனவாத படைகளுக்கு வாழ்த்துக் கூறி ந. ச. ச. க. தலைமையிலான இலங்கை வர்த்தக, கைத்தொழில் ஊழியர் சங்கம் ஒட்டிய சுவரொட்டி.

## அன்மைக்கால வரலாறு

இந்த விதத்தில் 1987ல் ஜயவர்த்தனாவுடன்பேச்சுவார்த்தைக்கு போய் இந்திய ஆக்கிரமிப்புக்கு ஆதரவளித்ததோடு, 1989ல் ஜே. வி. பி. இனவாதக் கலவரத்தை புரட்சிகரமானதொன்றென ஆதரித்தனர். மறுபுறம் பிரேமதாசாவின் அடக்குமுறையுடன் கூட்டுச் சேர்ந்தனர். 1990ல் மீண்டும் இனவாத யுத்தத்திற்கு 500 கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டு பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தனர். கிராமப்புறத்தில் கொலையுண்ட இளைஞர்களது பெற்றோர்களுக்கு உதவும்படி மனிதஉரிமை இயக்கத்திற்கு முறைப்பாடு செய்தனர். அடுத்து இத்துரோகிகள் ஏகாதிபத்தியம் காலனித்துவங்களை தேடியலையும் இவ்வேளையிலே, பிரித்தானிய ஏகாதிபத்திய தூதர் கிளாஸ்டனின் மனித உரிமை பற்றிய ஆத்திரமூட்டும் பிரச்சாரத்தில் இறங்கியுள்ளனர். ஏகாதிபத்திய தலையீட்டை கோரிக் கதறும் இவர்கள், ஏகாதிபத்திய ஆதரவாளர் தாம் என இனங்காட்டியபடி அனுராபண்டாரநாயக்க, லலித்அத்துலத்முதலி, காமினி திசாநாயக்கா உட்பட முதலாளித்துவ சி.ல.சு.க., மாஜி யூ.என்.பி. தலைமைகளுடன் பகிரங்கமாக மேடையேறியுள்ளனர்.

ஏகாதிபத்திய ஏஜன்டுகளாக செயற்படும் ந. ச. ச. கட்சித் தலைமைகளது வேலைத்திட்டங்கள் கடந்த ஆண்டு அவர்கள் அரவணைத்துக்கொண்ட பப்லோவாத ஐக்கிய செலகத்தின் எதிர்ப்புரட்சி வேலைத்திட்டங்களுடன் இணைந்தவையாகும். கிழக்குஐரோப்பா, சோவியத் யூனியன் ஆகியவற்றில் முதலாளித்துவ ஜனநாயக புனர்நிர்மாணத்திற்கு மண்டேலின் ஐக்கிய செயலகம் ஆதரவளித்தது. தற்போது அது சுயநிர்ணய உரிமையை ஏற்பதாகக்கூறி பாசிச தேசியவாத இயக்கங்களை ஆதரிக்கின்றது. 'குரோசியாவுக்கு சுதந்திரம் வழங்கு' என்ற ஜேர்மனிய ஏகாதிபத்திய சார்பு இயக்கத்திற்கு ஐக்கிய செயலகம் ஆதரவளிக்கின்றது. ந.ச.ச.கட்சி சந்தர்ப்பவாதத் தலைமைகள் உட்பட பப்லோவாதிகள் யாவரும் ஏகாதிபத்தியத்தி [illegible]

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருந்தோட்ட, கைத்தொழில் தொழிலாளர் சங்கம்

## பு. க. க. புதிய தொழிற்சங்கத்தை நிறுவியுள்ளது

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைப்பகுதியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அனைத்துலக சோசலிசத்தின் அடிப்படைக் கொள்கைகளின் அடிப்படையில் தொழிலாளவர்க்கத்தை அணிதிரட்டும் நடவடிக்கையாக பெருந்தோட்ட, கைத்தொழில் தொழிலாளர் சங்கத்தை நிறுவியுள்ளது. 1930ம் 1940ம் ஆண்டுகளில் சமசமாஜக்கட்சி ட்ரொட்ஸ்கிசம் பக்கம் ஈர்க்கப்பட்டிருந்த காலத்திலும் நான்காம் அகிலத்தின் கிளையாக இந்திய-போல்ஷிவிக்-லெனினிஸ்ட் கட்சி இருந்து வந்த நிலையிலும் தொழிற்சங்க இயக்கம் அனைத்துலகவாத தலைமையைக் கொண்டு பிரபல்யம் பெற்றது. 1950பதுகளில் இந்த அடிப்படையை தகர்க்கும் நடவடிக்கையாக தொழிற்சங்க இயக்கம் சந்தர்ப்பவாத தலைமைகளின் பிடியில் சிக்கியது. புதிய பெருந்தோட்ட, கைத்தொழில் தொழிலாளர் சங்கம் இந்த புரட்சிகர மரபுரிமைகள புனருத்தாரணம் செய்ய ஈவிரக்கமின்றிப்போராடும். இச்சங்கத்தின் பொதுச்செயலாளர் ரீ.என்.நிஹிஷான். தலைவர் கே.செல்வராஜா. பதிவுசெய்யப்பட்ட அலுவலகமுகவரி 90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை, கொழும்பு-10. இத்துடன் பெ.கை.தொ சங்கம் 6-01-1992ல் வெளியிட்ட பத்திரிகை அறிக்கை பிரசுரமாகின்றது.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தொழிலாள வர்க்கத்தின் அடிப்படை உரிமைகளைக் காக்கும் மற்றுமோர் முன்னணி நடவடிக்கையாக பெருந்தோட்ட, கைத்தொழில் தொழிலாளர் சங்கத்தினை அமைத்துள்ள செய்தியைத் தொழிலாள வர்க்கத்துக்கு அறிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றது. சகல துறைகளையும் சேர்ந்த தொழிலாளர்கள் இன்று முகம் கொடுத்துள்ள நிலைமையை நன்கு ஆழமாக ஆய்ந்த புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தொழிலாள வர்க்கத்தை அனைத்துலகவாத அடிப்படையில் அணிதிரட்டும் போராட்டத்தின் ஒரு பாகமாக இந்நடவடிக்கையை எடுத்துள்ளது.

முதலாளித்துவ யூ.என்.பி. அரசாங்கத்தின் கீழ், தொழிலாள வர்க்கத்தின் தொழில், வாழ்க்கைத்தரம் கடும்வெட்டுக்குள்ளாகியது. உலக வங்கியினதும் சர்வதேச நாணய நிதியத்தினதும் கட்டளையின் பேரில் அரசாங்கம் அரசதுறை தொழில்களை 25% ஆல் வெட்டவும் அத்துறைகளை உள்நாட்டு, வெளிநாட்டுக் கம்பனிகளிடம் கையளிக்கவும் செயற்பட்டு வருகின்றது. யூ.என்.பி. அரசாங்கம் இதனை தோட்டத்துறை, அரசதுறை, வங்கித் துறைகளில் நடைமுறைப் படுத்தியுள்ளது. ஏற்கனவே 450 தோட்டங்கள் 22 தனியார் கம்பனிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக பெருந்தோட்ட அமைச்சர் கூறியுள்ளார். இதன்படி தோட்டத்துறையில் மட்டும் இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் தொழில்களை இழப்பர். அவ்வாறே அரசாங்கத்தின் இந்நடைமுறையினால் தனிப்பட்ட முதலாளித்துவ நிறுவனங்களுள் கடும் நெருக்கடி ஏற்படுவதோடு அங்கும் பல்லாயிரம் தொழிலாளர்வேலை இழக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

யூ. என். பி. அரசாங்கத்தினதும் உலக வங்கியினதும் இப்புதியவேலைத்திட்டத்தின் கீழ் பெருந்தோட்டக் கைத்தொழில் துறை முழுவதும் சுதந்திர வர்த்தக வலயத்துக்குச் சமானமான கடும் தொழிலாளர் விரோத சட்டதிட்டங்களின் கீழ்க் கொணரப்படும். இதன் மூலம் தோட்டத்துறையில் பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக் காலத்தில் இருந்ததை விட மோசமான சுரண்டல் கோலோச்சும், தொழிலாள வர்க்கம் அணிதிரளும் அடிப்படை உரிமை துடைத்துக் கட்டப்படும். தொழிற் சங்க உரிமை ஒழிக்கப்படும். சுதந்திர வர்த்தக வலயத்துக்கு இன்று எல்லை வரையறை கிடையாது. அரசாங்கம் கூறியுள்ளது போல் முழு நாடும் ஒரு ஏற்றுமதி வலயமாக்கப்படும். இப்புதிய விதிமுறைகள் முதலாளித்துவம் தொழிற்சங்கங்களை அங்கீகரிக்க மறுக்கும் உரிமையை உறுதி செய்கிறது.

### தலைமை நெருக்கடி

இந்நிலைமையின் மத்தியில் தொழிற்சங்க இயக்கத்துள் தலைமை நெருக்கடி உச்சக் கட்டத்தை எட்டியுள்ளது. தொழிலாள வர்க்கத்தின் இன்றைய தலைமையாக உள்ள சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ, இ. தொ. கா, ஜ. தொ. கா தலைமைகள் இன்று உருவாகியுள்ள நாசகார நிலைமைக்கு எதிராக தொழிலாள வர்க்கத்தினை வழி நடாத்துவதை அடியோடு நிராகரிக்கின்றார்கள், இதிலும் இ.தொ.கா. தலைமை அரசாங்கத்துள் இருந்துகொண்டு தனியார்மயமாக்கத்தினை நடைமுறைப் படுத்தவும் இலட்சக்கணக்கான தொழிலாளர்களின் தொழில், அடிப்படை உரிமைகளை ஒழித்துக் கட்டவும் யூ. என். பி.யுடன் கூட்டுச் சேர்ந்துள்ளது. தோட்டங்களைத் தனியார் துறையிடம் கையளிப்பது தோட்டத் தொழிலாளர்களுக்கு வாய்ப்பான நிலைமைகளைச் சிருஷ்டிக்கும் என இ. தொ, கா. தலைவர்கள் கூறி வருகின்றார்கள், ஆனால் உண்மையோ இதற்கு நேர் எதிர்மாறானது என பெருந்தோட்ட, கைத்தொழில் தொழிலாளர் சங்கம் தொழிலாள வர்க்கத்துக்குக் கூறி வைக்கின்றது.

யூ. என். பி. அரசாங்கத்துக்கு வெளியில் உள்ள சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ ஜ. தொ. கா. தலைமைகளின் செயற்பாடு இதிலிருந்து வேறுபட்டது அல்ல. அரசாங்கத்தின் இந்த நாசகார வேலைத்திட்டத்தின் எதிரில் இத்தலைமைகள் தொழிலாள வர்க்கம் எந்தவொரு போராட்டத்திலும் இறங்குவதைத் தடுத்துக் கொண்டுள்ளார்கள். தோட்டத் தனியார்மயமாக்கத்துக்கு எதிராகத் தொழிலாள வர்க்கத்தினுள் உருவான கொதிப்பின் விளைவாக அக்டோபர் 21ம் திகதி அடையாளவேலை நிறுத்தம் ஒன்றினை ஒழுங்கு செய்வதாகக் கூறும் மோசடியில் ஈடுபட்ட இவர்கள் அதனைக் காலவரையறையின்றி ஒத்திப்போட்டனர். இதன் பின்னர் இவர்கள் சின்னி விரலைத்தன்னும் உயர்த்த முன்வரவில்லை. தனியார்மயமாக்கத்தை எதிர்த்தாலும் அதன் அமுலை நிறுத்த முடியாது என சில தலைவர்கள் கூறிவருகின்றார்கள். இந்த இலட்சணத்தில் தலைமை நெருக்கடி உக்கிரம் கண்டுள்ளது. இந்தத் தலைமை நெருக்கடிக்குத் தீர்வு காண்பதன் மூலம் முதலாளி. வர்க்கத்தின் எதிர்த் தாக்குதலுக்கு எதிராகத்தொழிலாளவர்க்கத்தினை அணிதிரட்டும் பொருட்டே பெருந்தோட்ட, கைத்தொழில் தொழிலாளர் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

யூ. என். பி. அரசாங்கமும் அதன் பின்னால் இழுபட்டுச் செல்லும் தொழிலாள வர்க்கத் தலைவர்களும் உலக ஏகாதிபத்தியத்தின் ஆழமான நெருக்கடியினாலேயே இயக்கப்பட்டு வருகின்றார்கள். இந்நெருக்கடியின் முன் நிலையில் ஏகாதிபத்தியத்தின் கையாளான உலக வங்கியும், ச. நா, நி.யமும் ஏகாதிபத்திய நெருக்கடியைத் தொழிலாள வர்க்கத்தின் இழப்புக்களின் மூலம் ஈடுசெய்யப்பார்க்கின்றன. தொழிலாள வர்க்கத்தினையும் அவற்றின் அமைப்புக்களையும் சிதறடிப்பதன் மூலம் உழைப்பினை மிகவும் மலிவாகச் சுரண்டவும் அதன் மூலம் பொருளாதார நெருக்கடியின் ஆழத்தினை மூடிக் கொள்ளவும் முயற்சிக்கின்றன. புதிய காலனித்துவ வேலைத்திட்டத்தில் ஏகாதிபத்தியவாதிகள் இறங்கக் காரணம் இதுவே. ஆனால் இந்த அழிவுமிக்க வேலைத்திட்டத்தின் முன்னால் நாட்டுக்கு நாடு தொழிலாள வர்க்கம் நானாவித போராட்டங்களுக்குத் தள்ளப்பட்டுள்ளது. இலங்கையினுள்ளும் இந்தப் போர்க்குணம் தொழிலாள வர்க்கத்தினுள் பரந்துபட்டுள்ளது. முதலாளி வர்க்கத்துக்கு எதிரான தொழிலாளர் போராட்டங்களைத் தவிர்த்துக் கொண்டுள்ள தமது தலைமைகளைப் பொருட்படுத்தாமல் தொழிலாளர்கள் தமது உரிமைகளைக் காக்க முன்னணிக்கு வந்து கொண்டுள்ளார்கள், சிறப்பாக தோட்டத்துறை, இரத்மலானை, கட்டுநாயக்க போன்ற இடங்களில் இடைவிடாத வேலை நிறுத்தமும் 'பிக்கட்டிங்' (மறியல்) இயக்கமும் பரந்து வருகின்றது. தொலைத்தொடர்பு, துறைமுகம், சுகாதார சேவை ஆகிய துறைகளிலும் வங்கித் துறையிலும் போராட்டங்கள் வெடித்தன. இச்சகல போராட்டங்களும் புதிய தலைமையை வேண்டி நிற்கின்றன. பழைய தலைமைகளின் இன்றைய பணி, இப்போராட்டங்களுக்கு கால் விலங்கு மாட்டுவதே. இத்தலைமைகளை மாற்றி புதிய மாற்று புரட்சித் தலைமையைக் கட்டி எழுப்புவதே பெருந்தோட்ட, கைத்தொழில் தொழிலாளர் சங்கத்தின் ஒரே இலக்கு,

தொழிலாள வர்க்கம் தமது உரிமைகளைத் தொடர்ந்தும் பேணிக் கொள்ள வேண்டின் முதலாளித்துவ சொத்துக்களை தமது ஆளுமைக்குள் கொணர்வதைத் தவிர வேறு வழியில்லை. உண்மை அதுதான். பொருட்களும் சேவைகளும் நாளுக்கு நாள் விலை அதிகரித்து வருகின்றது. கையில் கிடைக்கும் சொற்ப சம்பளம் ஒரு கணத்தில் கரைந்து போகின்றது. கிராமப்புற வறுமை தினமும் உக்கிரமடைகின்றது. அரசாங்கத்தின் தாக்குதல்களினால் ஏழை விவசாயிகளும் கிராமப்புற ஏழைகளும் பட்டினிக்குள்ளும் போஷாக்கின்மைக்குள்ளும் தள்ளப்பட்டுள்ளனர், காணி, நீர் பிரச்சினை மோசமடைகின்றது. இந்தச் சமூக நெருக்கடியைத் தீர்க்க முதலாளித்துவ ஆளும் வர்க்கத்துக்கு எதுவித சக்தியும் கிடையாது. அதற்குப் பதிலாக அவர்களின் கீழ் இந்த சமூகப் பிரச்சினைகள் உக்கிரம்அடைகின்றது. தொழிலாள வர்க்கத்தின் பாரம்பரியத் தலைவர்கள் தொழிலாளர் உரிமைகளுக்கானபோராட்டங்களை நடாத்தாததோடு கிராமப்புற விவசாயிகளையும் ஒடுக்கப்படும் தமிழ் மக்களையும் பேணுவதை அடியோடு கைகழுவி விட்டுள்ளனர். பெருந்தோட்ட, கைத்தொழில் தொழிலாளர் சங்கம் தொழிலாளர் வர்க்கத்தையும் விவசாயிகளையும் தமிழ் ஒடுக்கப்படும் மக்களையும் ஒரு பதாகையின் கீழ் அணிதிரட்டச் சபதம் பூண்டுள்ளது. முதலாளி வர்க்கத்தின் தாக்குதலைத் தோற்கடிக்கும் பொருட்டு இப் பிரிவினர் மேல் தமது தேசியவாத அழுத்தங்களைக் கொண்டுள்ள வர்க்க உடனுழைப்பு தொழிலாளர் தலைமைகளை அகற்றுதல் அவசியம். அவ்வாறே முதலாளித்துவ தாக்குதலைத் தோற்கடிக்கும் ஒரு பொது வேலை நிறுத்தத்தின் மூலம் பதிலளிக்க வேண்டும் என அது சுட்டிக்காட்டுகின்றது.

### தேசியவாத பாதை கிடையாது

இப்போராட்டத்தில் உலக தொழிலாளர் வர்க்கத்துடன் பாட்டாளி வர்க்க அனைத்துலக பிணைப்பினைக் கட்டி எழுப்புவது மிகவும் தீர்க்கமானது என எமது சங்கம் கருதுகின்றது. தொழிலாள வர்க்கப் போராட்டங்களை வெற்றி கொள்ளத் தேசியவாத பாதை கிடையாது என அது உறுதியாக நம்புகின்றது. இன்று இலங்கையில் தொழிலாள வர்க்கம் முகம் கொடுக்கும் பிரச்சினை, உலகத் தொழிலாள வர்க்கம் முழுமையாக முகம் கொடுக்கும் பிரச்சினையே. அதாவது இலாப உழைப்பு, மூலப் பொருள் கொள்ளையின் பொருட்டு உக்கிரமாக்கப்பட்டு வரும் மூன்றாம் உலக யுத்தத்துக்கும், மிலேச்ச காலனித்துவத்துக்கும். இந்நிலையில் உலக, தேசிய நிலைமையைத்தொழிலாள வர்க்கத்துக்குச் சார்பாக மாற்றும் பொருட்டு தொழிலாள வர்க்கத்தினை முதலாளித்துவ பிடிகளில் இருந்தும் தொழிலாள வர்க்கத்தினுள் செயற்படும் தொழிற்சங்கவாதிகளின் விலங்குகளில் இருந்தும் சுதந்திரமாக்க வேண்டும். பெருந்தோட்ட, கைத்தொழில் தொழிலாளர் சங்கம் இந்த விதிமுறையின் அடிப்படையில் தொழிலாள வர்க்கத்தினை அணிதிரட்டுவதை தனது இலக்காகக் கொண்டுள்ளது. தொழிலாள வர்க்கத்தினை இந்த இலக்கில் இட்டுச் செல்ல சகல தொழிலாளர்களையும் பெருந்தோட்ட, கைத்தொழில் தொழிலாளர் சங்கத்தில் சேருமாறு அழைக்கின்றோம்.

---

சோசலிச புரட்சியின் உலக கட்சியை கட்டி எழுப்பு!

**புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருங்கள்**

பெயர் : ..................................................

முகவரி : ..................................................

கழகத்தைப் பற்றி மேலும் விபரங்கள் பெற நிரப்பிய இப்பத்திரத்தை அனுப்ப வேண்டிய முகவரி:

தேசிய செயலாளர் :


**புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்**

இல: 90, 1வது மாளிகாகந்தை ஒழுங்கை, கொழும்பு 10.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகாதிபத்திய யுத்தத்துக்கும் காலனித்துவத்துக்கும் எதிரான உலகத் தொழிலாளர் மகாநாடு

# "தொழிலாள வர்க்கத்தை உலகளாவிய ரீதியில் தயார் செய்யும் ஓரே இயக்கம் எமதே"



விஜே டயஸ்

வரலாற்று முக்கியத்துவம் கொண்ட இந்த மகாநாட்டிற்கு நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைப் பகுதியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக அங்கத்தினர்களின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ள நான் விரும்புகிறேன்:

தோழர்கள் இம்மகாநாட்டின் வரலாற்று முக்கியத்துவம் பற்றி ஏற்கனவே பேசியுள்ளார்கள். அது வெறுமனே அனேக தேசிய இனங்களைச் சேர்ந்த பாட்டாளி வர்க்கத்தினையும் ஒடுக்கப்படும் மக்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் விதத்தில் அநேக நாடுகளில் இருந்து இங்கு நாம் கூடியுள்ளதால் அல்ல–அதுவும் கூட முக்கியத்துவம் நிறைந்ததே. இந்த மகாநாட்டின் அடிப்படைச் சிறப்பு இந்த சகாப்தத்தின் மிகவும் அடிப்படையான வரலாற்று முக்கியத்துவத்தில் அது வேரூன்றியுள்ளதில் உள்ளது. இது உலக யுத்தங்களதும் புரட்சிகளதும் சகாப்தம். மனித இனத்திற்கு எதிரான மற்றுமோர் பேரழிவுமிக்க உலக யுத்தத்தினை நடாத்தும் ஏகாதிபத்தியவாதிகளின் முயற்சிகளைமுகம் கொண்டு. தோற்கடிக்க தொழிலாள வர்க்கத்தினை உலகளாவிய ரீதியில் தயார் செய்துவரும் ஒரே இயக்கம் எமதே.

வரலாற்று விதிகளை நசுக்கலாம். ஆனால் அவற்றை ஒழித்துக் கட்டி விடமுடியாது அதனையே நாம் கடந்த 44 ஆண்டுகளாகக்கண்டு கொண்டுள்ளோம். இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் உலக உற்பத்திச் சக்திகளை பிரமாண்டமான முறையில் நாசமாக்கியதன் மூலமும் அவ்வாறே மனித இனத்தின் கோடானுகோடி மக்களை கொலை செய்ததன் மூலமும் ஏகாதிபத்தியவாதிகள் துரோக சமூக ஜனநாயக, ஸ்டாலினிச அதிகாரத்துவங்களின் ஆதரவுடன் ஒரு உலக ஒழுங்கினை நிலைநாட்ட முடிந்தது.

## உலக யுத்தத்தின் பின்னைய ஒழுங்கமைப்பின் சரிவு

ஆனால் இன்று நாம் அந்த ஒழுங்கமைப்பின் பூரண சரிவினைக் காண்கின்றோம். இதன் தோற்றம் உண்மையில் நான்காம் அகிலத்தின் ஒரு பகுதியுட்பட பலரை தடுமாறச் செய்தது. 1950பதுகளில் ஆரம்பத்தில் பப்லோவாதம்பிரதிநிதித்துவம் செய்தது, அதனையே. ஆனால் நான்காம் அகிலம் வரலாற்றின் அடிப்படை விதிகளில் வேரூன்றி நின்றதோடு இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னரும் கூட பாட்டாளி வர்க்கம் உலக சோசலிசப் புரட்சியின் சாத்தியம் பற்றி நம்பிக்கையிழக்கக் காரணம் இல்லை எனச் சரியாகச் சுட்டிக் காட்டியது.

'நாம் பேணும் மரபுரிமைகளில்' மேற்கோள் காட்டியுள்ளவாறு 1946ல் நான்காம் அகிலம் வகித்த நிலைப்பாட்டை நான் மேற்கோள் காட்ட விரும்புகின்றேன்: ''பின்வரும் விடயங்களில் எமது புரட்சிகர முன்நோக்கு மறுக்கப்படுவதை ஆழமற்ற குட்டி முதலாளித்துவ சிந்தனைகளால் மட்டுமே காண முடியும்: யுத்தம் அது இடம் பெற்ற சமயத்திலோ அல்லது அதன் பின்னர் உடனடியாகவோ ஐரோப்பாவில் புரட்சியை கொணரவில்லை: ஜேர்மன் புரட்சி இடம்பெறாமை; பாரம்பரிய அமைப்புக்கள்—அவற்றுள் முக்கியமாக ஸ்டாலினிசக் கட்சிகள் ஒரு புதியதும், பலம்வாய்ந்ததுமான எழுச்சியைக்கண்டமை' இச்சகல விடயங்களும் புரட்சிகர பாட்டாளி வர்க்கத்துக்கு பல தோல்விகளைப் பிரதிநிதித்துவம் செய்வதை அங்கீகரிக்கும் அதே வேளையில் நான்காம் அகிலம் ஒரு கணம் தன்னும் முதலாளித்துவத்தின் மரண நெருக்கடி, அதன் சமபலத்தின் அழிவு, அதன் அடிப்படை மூரண்பாடுகள் ஆழமடைந்தமை மிகவும் முக்கியமான விடயங்களை உள்ளடக்கிக் கொண்டுள்ளதை மறந்து போக முடியாது. இவற்றின் மீதே எமது புரட்சிகர முன்நோக்கும் புரட்சிகர கட்சியை கட்டி எழுப்புவதற்கான பரந்தளவில் அதிகரித்த வாய்ப்புக்களும் தங்கியுள்ளன.'' இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் எமது இந்த அடிப்படை எடுகோள்களில் இருந்தே அபிவிருத்திகளை நாம் ஆய்வு செய்யத் தொடங்கினோம்.

நான்காம் அகிலத்தினால் நிலைநாட்டப்பட்ட இந்த ஆதாரத்தின் அடிப்படையில் இந்திய போல்ஷிவிக்—லெனினிஸ்ட் கட்சி பின் தங்கிய நாடுகளில் ஏகாதிபத்தியவாதிகளுக்கும் தேசிய முதலாளி வர்க்கத்துக்கும் இடையேயான ஏற்பாடுகளை மக்களுக்கு எதிரான ஒரு சதியெனச் சரியான விதத்தில் இனங்கண்டது. அதுதான் இனங்காணல். இந்தியத் துணைக்கண்டத்தின்உள்ளோ அல்லது அது சம்பந்தமாக வேறெங்குமோ அவர்கள் மோசடி தேசிய அரசுகளின் ஸ்தாபிதத்திற்கு இயைந்து போய்விடவில்லை, ஆனால் இந்த நிலைப்பாடுகள் கரைக்கப்பட்டன. பப்லோவாதிகள் இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னைய ஒழுங்குக்கு இணங்கிப் போயினர்.

இன்று இந்த உலக ஒழுங்கிற்கு என்ன நேரிட்டுள்ளது?. ஆரம்ப அறிக்கையில் தோழர் டேவிட் நோர்த் சுட்டிக்காட்டியது போல் ஏகாதிபத்திய ஒழுங்கமைப்பு ஒழுங்கமைக்கப்பட ஒதுக்கிடம் வழங்கிய அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மேலாதிக்கம் சரிந்து கொட்டியுள்ளது. இன்று ஏகாதிபத்தியவாதிகளிடையேயான போட்டிகள் முன்னணிக்கு வந்துள்ளன. போட்டி ஏகாதிபத்தியச் சக்திகள் ஏகாதிபத்திய தேவைகளுக்கு இணங்க மீண்டும் ஒரு தடவை உலகை மறுபங்கீடு செய்யும் ஒரு புதிய யுத்தமோதுதலுக்கு இட்டுச் செல்கின்றது.

உலகப் பாட்டாளி வர்க்கத்தினையும் வெகுஜனங்களையும் இச்சகாப்தத்தில் அவர்களின் வரலாற்றுப் பொறுப்புக்களுக்கு முகம் கொடுக்கும் வகையில் எமது இயக்கம் மட்டுமே மார்க்ஸ், எங்கேல்ஸ், லெனின், ட்ரொட்ஸ்கியால் இடப்பட்ட கோட்பாட்டுஅத்திவாரத்தின் அடிப்படையில் நான்காம் அகிலத்தினை கட்டி எழுப்பி வருகின்றது.

## ஏகாதிபத்திய யுத்தத்துக்கு எதிரான மார்க்சிச வேலைத்திட்டம்

[illegible] வெற்றிக்குப் பல மாதங்களின் முன்னர் லெனினால் எழுதப்பட்ட பாட்டாளி வர்க்கப் புரட்சியின் யுத்த வேலைத்திட்டம் கூறுவதாவது ''ஒரு நாட்டில் மட்டுமல்ல உலகம் முழுவதிலும் முதலாளித்துவத்தினைத் தூக்கி வீசி, இறுதியில் வெற்றிவாகை சூடி ஒழித்துக்கட்டுவதன் மூலமே யுத்தங்கள் சாத்தியமில்லாது போகும்.'' ஏகாதிபத்தியத்தினை உலகளாவிய ரீதியில் தூக்கி வீசுவதன் மூலம் மட்டுமே ஏகாதிபத்திய யுத்தங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும். இதுவே ஒரு உலக முன்நோக்காகும்.

மார்க்சிச இயக்கம் அதன் ஆரம்பம் தொட்டு அதன் ஸ்தாபக பத்திரமான கம்யூனிஸ்ட் அறிக்கையில் இருந்து உலக சோசலிச முன்நோக்கினையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. மார்க்சிச இயக்கத்தின் உள்ளே தேசிய சோசலிசம், அபிவிருத்திக்கான தேசிய பாதைகளுக்கு இடமே கிடையாது. அத்தோடு இந்த வரலாற்று விதிகளுக்குப் புறமுதுகு காட்டுவோரை வரலாறு இரக்கமற்ற முறையில் பழிவாங்குகின்றது. இன்று இதற்கு ஸ்டாலினிச ஆட்சிகளின் அவமானமான சரிவு சாட்சியாக நின்று கொண்டுள்ளது.

ஈராக்குக்கு எதிராக மத்திய கிழக்கில் அவர்கள் நடாத்திய யுத்தத்தில் ஏகாதிபத்தியவாதிகள் திரும்பவும் உலகை மறுபங்கீடு செய்ய எப்படி முயற்சிக்கின்றனர் என்பதை நாம் கண்டோம். இலட்சக் கணக்கான மக்கள் கொலை செய்யப்பட்டனர்: ஈராக்கிய வெகுஜனங்கள் தண்ணீர், வைத்திய வசதி இல்லாமல் கடந்த நூற்றாண்டின் நிலைமைக்குத் தள்ளப்பட்டனர். பின்தங்கிய நாடுகளில் மட்டுமன்றி முன்னேறிய நாடுகளிலும் கூட அவர்கள் கோடானு கோடி மக்களுக்கு வழங்கப் போகும் தலைவிதி இது தான். அவர்கள் இத்தோடரினை ஏற்கனவே ஆரம்பித்துள்ளனர். எனவேதான் இந்தக் காட்டுமிராண்டி அமைப்புக்கு எதிராக உலகப் புரட்சிகர சக்தியை அணிதிரட்டுவதை நாம் ஆரம்பித்து வைக்கவேண்டும் என நாம் கூறுகின்றோம்,

யுத்தத்தின் போது இவ்வளவு பேரழிவினைப் திணித்ததன் பின்னர் ஏகாதிபத்தியவாதிகள் ஈராக்குக்கு ஏதேனும்சலுகைகளையோ அல்லது நிவாரணத்தினையோ வழங்கியுள்ளார்களா? இல்லை. அவர்கள் இன்னமும் ஈராக் வெகுஜனங்களின் பின்னாலேயே அலைகிறார்கள். அவர்கள் இன்னமும் தடைகளைத் திணித்து வருகின்றார்கள். அவர்கள் ஈராக்கில் இன்னும் பல இலட்சம் மக்களை பட்டினியோட முயற்சிக்கிறார்கள். உலகம் பூராவும் இதே கொள்கையையே அவர்கள் கடைப்பிடிக்கிறார்கள்.

உதாரணமாக சமீபத்தில் இந்தியாவில் ஆட்சிக்கு வந்த நரசிம்மராவ் அரசாங்கம் இந்தியாவின் சுதந்திர சகாப்தம் எனப்படும் காலப்பகுதி முன்னொருபோதும் கண்டிராத நடவடிக்கைகளை எடுத்துள்ளது. நாட்டின் ஏழைத் தொழிலாளர்களையும் ஒடுக்கப்படும் மக்களையும் சுரண்டும் விதத்தில் ஏகாதிபத்திய முதலீட்டாளர்கள் நுழையக் கதவுகளைத் திறந்துவிட்டுள்ளது. ஆனால் அது ஏகாதிபத்தியவாதிகள் இந்தியா மீது உமது சகல காட்டுமிராண்டி நடவடிக்கைகளைத் திணிப்பதை நிறுத்திவிடவில்லை. அவர்கள் இநதியப் பொருளாதாரத்தினை பூரணமாக நாசமாக்கும் படியும் ஒழித்துக்கட்டுமாறும் கோருகின்றனர். பின்தங்கிய நாடுகளில் ஏகாதிபத்தியவாதிகளின் தலையீட்டின் அர்த்தம் அதுவே.

இது ஏதோ சில ஏகாதிபத்திய மூலதனத்தினை அல்லது ஏகாதிபத்தியத் தொழில் நுட்பத்தினை ஒரு பின்தங்கிய பொருளாதாரத்தினுள் பாய்ச்சுவது பற்றிய ஒரு பிரச்சினை அல்ல. அவர்கள் இந்த பின் தங்கிய நாடுகளுள் நுழையும் பட்சத்தில் அவர்கள் அவற்றின் பொருளாதாரங்களை ஒழித்துக்கட்ட வேண்டியிருக்கும்.

அவர்கள் 19ம் நூற்றாண்டில் அல்லது 18ம் நூற்றாண்டில் இந்நாடுகளுள் அடித்து வீழுந்து பாய்ந்த போது உண்மையில் இதையே செய்தனர். சகல பாரம்பரியக் கைத் தொழில்களும் — கில்டுகளும் உள்ளூர் கைத்தொழில்களும் - துடைத்துக்கட்டப்பட்டதோடு இக் கைத்தொழில்களின் சாம்பலின் மீதே ஏகாதிபத்திய முயற்சிகள் நிறுவப்பட்டன. உற்பத்திச் சக்திகளதும் தொழில் நுட்பத்தினதும் அபிவிருத்தியோடு அவை பின் தங்கிய அத்தகைய பேரழிவினை திரும்பவும் வேண்டி நிற்கின்றன. அந்த அடிப்படையில் மட்டுமே ஏகாதிபத்தியவாதிகளால் அந்நாடுகளில் உள்ள மக்களை தனிப்பட்ட இலாபச் சுரண்டலுக்கு கசக்கிப் பிழிய முடியும்.

ஆதலால் பின்தங்கிய நாடுகளில் ஏகாதிபத்தியவாதிகளின் உலக மறுபங்கீட்டிற்கான தலையீட்டினை ஏதோ ஒரு மறுசீரமைப்புத் தன்மை கொண்டதாக நாம் கொள்ள முடியாது. இது தொழிலாள வர்க்கம், ஒடுக்கப்படும் மக்கள் மீதான ஒரு பேரழிவு மிக்க தாக்குதலாகும்.

இதனை அவர்கள் முன்னேறிய முதலாளித்துவ நாடுகளின் தொழிலாள வர்க்கம், வெகுஜனங்களிற்கு எதிராக மிகவும் நாசகரமான தாக்கு

ஏகாதிபத்திய யுத்த
ரான பிரேரணை
தேசியச் செயலாள
கம்யூனிஸ்ட் கழக
நிகழ்த்திய உரைக

தலை நடாத்தும் அ
யிலேயே செய்கி
எனவேதான் நாம்
றிய முதலாளித்துவ
லும் அத்தோடு பி
நாடுகளினதும்—உல
லாள வர்க்கத்தின்
தினை வலியு
றோம். இது வர
சிறப்பு முக்கி
கொண்டது. அந்
படையில் மட்டுமே ந
ஏகாதிபத்திய நட
களை எதிர்கொண்
கடிக்க முடியும்.

## ட்ரொட்ஸ்கி நிரந்தரப் பு கோட்பா

நிரந்தரப் புரட்சி
பாட்டில் ட்ரொஸ்கி
வலியுறுத்தினார். 19
ந்தரப் புரட்சி' ஜேர்
ப்புக்கு ட்ரொட்ஸ்கி
முன்னுரையில்
ட இன்றைய
டைந்த நிலைமைக
தரப் புரட்சிக் கோ
ற்குப் பெரிதும் சா
உள்ளன எனக்
வேண்டும். ''நாம் பெ
த்தானியாவையும்
வையும் முதலா
மாதிரியின் துருவ வ
வாகக் கொள்ளின்
த்தானிய, இந்தி
டாளி வர்க்கத்தின்
துலகவாதம் இன
கூடிய ஒரு நிலை
பணிகள், விதிமுறை
எதுவிதத்திலும் சா
மல் அவற்றின் பி
யாத பரஸ்பரம்
தன்மையில் சார்
இந்திய விடுதலை
தின் வெற்றி பிரித்
வில் ஒரு புரட்சிகர
தினை முன்ன
வேண்டி நிற்பதோடு
தானியாவைப் பொற
டில் அதன் அடுத்த
ஆகும். இந்தியாவிலே
லது இங்கிலாந்திலே
சுதந்திரமான சோசலி
தாயத்தினை அ
சாத்தியமில்லை; இ
ண்டுமே ஒரு
முழுமையின் பாக
நுழைய வேண்டிய
இதன் மீதுமட்டுமே ம
அனைத்துலக வா
ஈடாட்டம் காணாத
வாரம் தங்கியுள்ளது.''

இந்த அடிப்படையி
நாம் ஒவ்வொரு நா
புரட்சிகரத் தொழிலா
கத்தினை ஏகாதிபத்தி
தத் தயாரிப்புக்களுக்
ரான ஒரு ஐக்கியப்ப
ட்சிகரச் சக்தியாக
திரட்ட வேண்டியிருக்

இரண்டாம் உல
தத்தின் பின்னர்
கிய நாடுகளில் அ
பட்ட ஆட்சிகள்
முகம் கொடுப்பதை
காண்கின்றோம். இ
சிகளை ஈடாட்டம்
செய்யவும் தமது தே

(7-ம் பக்கம் பார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "யுத்தத்துக்கு எதிரான போராட்டம் நான்காம் அகிலத்துக்கான போராட்டம்"

...த்திய யுத்தத்துக்கும் காலனித்துவத்துக்கும் எதி...ரேரணை மீது அவுஸ்திரேலிய சோசலிசத்தின் ...செயலாளர் நிக் பீம்சும், இலங்கை புரட்சிக் ...ஸ்ட் கழக பொதுச் செயலாளர் விஜே டயசும் ...ய உரைகள்.

...ாத்தும் அதேவேளை
செய்கிறார்கள்.
...ான் நாம் முன்னே
...லாளித்துவ நாடுகளி
...த்தோடு பின்தங்கிய
...னதும்—உலக தொழி
...ர்க்கத்தின் ஐக்கியத்
வலியுறுத்துகின்
... இது வரலாற்றுச்
முக்கியத்துவம்
...து. அந்த அடிப்
... மட்டுமே நாம் இந்த
...த்திய நடவடிக்கை
...திர்கொண்டு தோற்
...டியும்.

## ...ாட்ஸ்கியின் ...ரப் புரட்சிக் ...காட்பாடு

...ப் புரட்சிக் கோட்
... ட்ரொஸ்கி இதை
...தினார். 1930ல் 'நிர
...ரட்சி' ஜேர்மன் பதி
...ரொட்ஸ்கி எழுதிய
...ரயில் குறிப்பிட்
...ன்றைய ...ற்றம
...லைமைகளால் நிரந்
...ட்சிக் கோட்பாட்டி
...பரிதும் சாதகமாக
... எனக் குறிப்பிட
... "நாம் பெரிய பிரி
...வையும் இந்தியா
முதலாளித்துவ
... துருவ வகையறா
...காள்ளின் நாம் பிரி
... இந்திய பாட்
...க்கத்தின் அனைத்
...ம் இனங்காணக்
...ரு நிலைமைகள்
விதிமுறைகளில்,
...திலும் சார்ந்திரா
...றின் பிரிக்கமுடி
...ரஸ்பரம் சார்புத்
... சார்...துள்ளன.
...டுதலை... இயக்கத்
...றி பிரித்தானியா
...ரட்சிகர இயக்கத்
முன்னதாகவே
...நிற்பதோடு பிரித்
...வப் பொறுத்தமட்
...ன் அடுத்த பக்கம்
...ந்தியாவிலோ அல்
...கிலாந்திலோ ஒரு
...ன சோசலிச சமு
...ன அமைப்பது
...ல்லை. இவை இர
... ஒரு உயர்ந்த
...ன் பாகங்களாக
... வேண்டியிருக்கும்.
...மட்டுமே மார்க்ஸிச
...லக ...வாதத்தின்
... காணாத அத்தி
...கியுள்ளது'.''

...டிப்படையிலேயே
...வாரு நாட்டிலும்
... தொழிலாள வர்க்
...ஏகாதிபத்திய யுத்
...ிப்புக்களுக்கு எதி
...ஐக்கியப்பட்ட புர
... சக்தியாக அணி
...ண்டியிருக்கும்.

...ாம் உலக யுத்
...பின்னர் பின்தங்
...களில் அமைக்கப்
...ட்சிகள் சரிவுக்கு
...காடுப்பதை நாம்
...றோம். இந்த ஆட்
...ாட்டம் காணச்
... தமது தேவைகளு
...க்கம் பார்க்க)

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அவுஸ்திரேலிய கிளையானசோசலிசத் தொழிலாளர் கழகத்தின் சகல அங்கத்தவர்களினதும் மனமார்ந்த புரட்சிகர வாழ்த்துக்களை இந்த நிச வரலாற்று புகழ்மிக்க மகாநாட்டிற்குகூறியபடி எனது கருத்துக்களைச் சமர்ப்பிக்க நான் விரும்புகிறேன்.

ஏர்ணஸ்ட் மண்டேலின் ஐக்கிய செயலகமும் அதன் பல்வேறுபட்ட குழுக்களும் ஏகாதிபத்தியத்தின் அரசியல் ஏஜன்டுகளேயன்றி வேறொன்றுமல்ல என்றும் அனைத்துலகக் குழு, நான்காம் அகிலத்தின் உள்ளேயான பல்வேறுபட்ட போக்குகளில் ஒன்றன்றி நான்காம் அகிலமே யாகும் என்றும் தெளிவுபடுத்திய ஆரம்ப அறிக்கையுடன் நான் இணங்குகின்றேன்.


நிக் பீம்ஸ்

ட்ரொட்ஸ்கி குறிப்பிட்டது போல் யுத்தத்திற்கு எதிரான போராட்டம் நான்காம் அகிலத்துக்கான போராட்டமே யாகும். ஆதலால் உண்மையில் நான்காம் அகிலம் எது என்பதையும், போலியும் மோசடியும் ஏகாதிபத்தியத்தின் ஏஜன்டும் யார் என்பதை இனங்கண்டு ஸ்தாபிதம் செய்வதும் ஏகாதிபத்திய யுத்தத்திற்கும் காலனித்துவத்திற்கும் எதிரான போராட்டத்தில் மிகவும் தீர்க்கமான பிரச்சினையாகும்.

இம்மகாநாட்டிற்கு அழைப்பு விடுத்த மே தின விஞ்ஞாபனத்தில் அனைத்துலகக்குழுவானது ஈராக்கிற்கு எதிரான கொடூர யுத்தம் ஏகாதிபத்திய காட்டுமிராண்டித் தனத்தின் புதிய காலகட்டத்தின் வெளிப்பாடாகும் என்று விளங்கப் படுத்தியது. அது யுத்தத்தின் பின்னைய முதலாளித்துவ சமநிலையின் முற்றான தகர்வாகும் என நாம் குறிப்பிட்டிருந்தோம். இந்தச் சம நிலையினூடாகவே ஏகாதிபத்திய யுத்தங்களுக்குத், தூண்டுகோலான வரலாற்று முரண்பாடுகள் அடக்கப்பட்டு, ஒழுங்கு செய்யப்பட்டன. ஆனால் அடக்கப்பட்ட போதிலும் தலையெடுக்கவில்லை.

## பால்கன் யுத்தம்

இந்த ஆய்வு தற்போது நிகழும் சம்பவங்களால் மிகப் பலமாக நிருபிக்கப் பெற்றுள்ளது. கடந்த ஐந்து மாதங்களாக பால்கனில் வெடித்துள்ள யுத்தம் வெறுமனே போட்டித் தேசிய குழுக்கள் முதலாளித்துவப் புனருத்தாரணத்தில் ஈடுபட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள பிணக்குகளின் வெளிப்பாடுகள் அல்ல. இவை இதிலும் மேலான ஆழ்ந்த அர்த்தத்தை கொண்டவை. வரலாற்று ரீதியில் பால்கன் நாடுகள் ஐரோப்பாவின் தேசிய அரசு அமைப்பில் மிகவும் பலம் குன்றிய நாடுகளாக அமைந்துள்ளன. ஓர் அணைக்கட்டினது வெடிப்பின் ஊடாக நீர் வெளியேறி, முழு அணைக்கட்டையும் உடைத்துப் பாய்வது போல முதலாளித்துவத்தின் அமைப்பு முறையான தேசிய அரசுகளின் நெருக்கடி மீண்டும் பால்கன் நாடுகளில் வெடித்துள்ளது. கடந்த ஐந்து மாதங்களுள் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப் பட்டனர். குறைந்தது 5000. குறைந்தபட்சம் 3,50000பேர் வீடுகளை இழந்துள்ளனர். வுக்கோவர் போன்ற நகரங்கள் முழுமனே தரைமட்டமாக்கப்பட்டுள்ளன.

வரலாற்றுபுகழ்மிக்க துறைமுக நகரமான டுப்றோவ்னிக்கில் இடம்பெற்ற குண்டுவீச்சும், அதன் விலைமதிப்பற்ற கலாட்சார மரபுகளுக்கும் ஏற்பட்டுள்ள ஆபத்தும் ஆழமான வரலாற்று முக்கியத்துவம் கொண்டுள்ளன.

இவை சுவரில் எழுதப்பட்டுள்ளன. இந்த எச்சரிக்கை இன்று இரத்தத்தில் பொறிக்கப்பட்டு வருகின்றது, முதலாளித்துவம் அதன் மரண ஓலத்தில் உள்ளதால் மீண்டும் யுத்தத்துக்கு தள்ளப்பட்டுள்ளது. மனித இனத்தின் சகல வரலாற்றுத் தேட்டங்களும் நாகரீகமும் நேரடியாக அச்சுறுத்தப்பட்டுள்ளது.

குரோஷியா, சேபியா என்ற இரு நாட்டுதலைவர்களாலும் வேண்டப்பட்டுள்ள ஐக்கிய நாடுகளின் சமாதான படை எனப்படுவதை வைத்திருக்க வேண்டுமென்ற கோரிக்கையானது பால்கனின் புதிய பிரிவினைக்கு வித்திடும் என்பதை நாம் யூகோசலாவிய தொழிலாளருக்கு தெளிவாக எச்சரிக்க வேண்டும்.

சகல ஏகாதிபத்தியச் சக்திகளும் தாம் பிடுங்கிக்கொள்ள விரும்பும் செல்வாக்கு வலயங்களில்கண்வைத்துள்ளன.ஜேர்மனிய ஏகாதிபத்தியம் மீண்டும் ஒரு தடவை கிழக்கிற்கு தள்ளப்பட்டு[illegible] வாடிக்கை [illegible] குரோஷியாவையும், சிலோவியாவையும் வைத்து கொள்ளுமுகமாக சுதந்திர குடியரசுகள் எனப்பட்டவற்றை நிறுவும் வழியை தேடுகிறது. தனது வரலாறு பூராவும் அல்பேனியாவையும் குரோஷியாவின் டல்மேஷியன் பிராந்தியத்தையும் பிடுங்கிக்கொள்ள வழிதேடி வந்த இத்தாலிய ஏகாதிபத்தியம், பால்கனிலிருந்து முசோலினியின் படைகள் விரட்டப்பட்டதிலிருந்து முதல் தடவையாக தனது துருப்புகளை அங்கு நிலைகொள்ள வைத்துள்ளது. தனது போட்டியாளனான ஜேர்மனியால் கிழக்குப் பக்கமாக தள்ளப்படும் நடவடிக்கையையிட்டு அச்சமடைந்துள்ள பிரான்சிய ஏகாதிபத்தியம், தற்போதுள்ளஅமைப்பை எப்படியாவது பேணிக்கொள்ளும் முயற்சிக்கு ஆதரவு தெரிவித்துள்ளது. பிரித்தானிய, அமெரிக்க ஏகாதிபத்தியங்களும் ஓரளவுக்கு இக்கருத்தையே கொண்டுள்ளன.

பால்கனில் அமைதி நிலைநாட்டப்பட ஒரே ஒரு வழிதான் உண்டு. அது வர்க்கப் போராட்டமே. பாட்டாளி வர்க்க அனைத்துலகவாத வேலைத்திட்டத்துக்கான போராட்டம். இந்த போட்டி தேசிய கும்பல்களைகொண்ட இன்றைய முழு அமைப்பினையும் தூக்கிவிசி, ஐரோப்பிய ஐக்கிய சோசலிச அரசுகளின் ஒரு பாகமாக பால்கன் சோசலிச குடியரசினை அமைக்க தொழிலாள வர்க்கத்தை அணிதிரட்டவேண்டும்.

சரியாகச் சொன்னால் யுத்தம் என்பது, சகல கட்சிகளுக்கும், வேலைத்திட்டங்களுக்குமான ஒரு பரீட்சை பால்கனில் நடைபெறும் யுத்தம் இதிலிருந்து விதிவிலக்கானதல்ல என்பதை நிருபித்துள்ளது. முதலாவதாக இது ஸ்டாலினிச அதிகாரத்துவத்தினதும் கொம்பிரதோர்' முதலாளித்துவத்தினதும் போட்டிக் கும்பல்களின் முதலாளித்துவ புனருத்தாரண வேலைத்திட்டத்தின் நிச அர்த்தத்தினைநன்கு வரைந்து காட்டியுள்ளது.

சேர்பிய தேசியவாதிகள் பாரிய சேபியா ஒன்றை நிறுவும் இலக்கை கொண்டிருப்பதுடன், தமது எதிரிகளுக்கெதிராக அப்பகுதியில் தம்மை பலம்வாய்ந்த ஆளாக்கப்பார்க்கின்றனர். பொருளாதார விழ்ச்சி, பாரிய வேலையின்மையிட்டு ஆத்திரமுற்றுள்ள மக்களை திசை திருப்பும்கையாலாகாத முயற்யாகவே இந்த பிற்போக்கு யுத்தத்தை தொடுத்துள்ளது.

குரோஷியன் கும்பலின் வேலைத்திட்டம் பிற்போக்கில் இதற்கு சற்றுப் குறைந்ததல்ல. 1941ல் அன்டி பவாலிக்கின் கீழ் வஷ்டாஸாவால் நிறு[illegible] அரசின் [illegible] ஜேர்மன் ஏகாதிபத்தியத்தின் கொம்பிரதோர், ஆட்சியாளராக தம்மை நிலைநாட்டிக்கொள்ளும் நோக்கில் அவை இயங்குகின்றன.

இவ்விரு போட்டிக் கும்பல்களுக்கிடையேயான மோதலில் எந்தக் கும்பல் 'குறைந்த கெடுதி' கொண்டது என்ற பிரச்சனை முற்றிலும் அர்த்தமற்றது. அவை ஒரே அமைப்பின் இரு அம்சங்கள். இவ்விரு கும்பல்களையும் தூக்கிவீசும் சுயாதீனமான வேலைத்திட்டத்தை தொழிலாள வர்க்கம முன்னெடுத்துச் செல்லவேண்டும்.

அனைத்துலகத் தொழிலாள வர்க்கமானது,இந்த சம்பவங்களிலிருந்து தீர்க்கமான பாடங்களைக்கற்றுக்கொள்ள வேண்டும். சகலவிதமான தேசியவாத,இனவாத,சோவினிச வடிவங்களுக்கு எதிராக பாட்டாளிவர்க்க சர்வதேசிய வேலைத்திட்டத்துக்கான போராட்டமானது உண்மையில் வாழ்வுக்கும் சாவிற்கும் இடையிலான பிரச்சனையாக உள்ளது. தொழிற்சங்க, தொழிலாளர் அதிகாரத்துவங்களின் ஒவ்வொரு பிரிவினசதும் தேசியவாத, சோவினிச வேலைத்திட்டங்கள் யூகோசலவியாவில் ஸ்டாலினிச, மாஜி ஸ்டாலினிச கும்பல்கள் கடைப்பிடிப்பவற்றில் இருந்து பிற்போக்கில் ஒன்றும் குறைந்தவையல்ல. சேர்பியன், குரோசியன் கொள்ளையர்கள் இந்த உடன்பிறப்பைக் கொல்லும் யுத்தத்தினை தூண்டிவிட்டது போல் இனவாதமும், சோவினிசமும் உள்ள ஒவ்வொரு நாட்டிலும் சமூக ஜனநாயக, தொழிற்சங்க அதிகாரத்துவங்கள் இதை வளர்த்துக் கொண்டும் கிண்டிவிட்டுக் கொண்டும் உள்ளனர். இந்த வேலைத்திட்டத்தின் பெறுபேறு யுத்தமே.

எனவேதான் நாம் இந்த மகாநாட்டிற்காக வரைந்த பிரேரணையில் அனைத்துலகத் தொழிலாள வர்க்கம் கிளர்ந்து எழுந்து, இந்தச் சக்திகளை தொழிலாளர் இயக்கத்தில் இருந்து வெளியேற்றி விட வேண்டுமென்றும் வற்புறுத்துகின்றோம். முதலாளித்துவவர்க்கமும் அதன் சேவகர்களான தொழிற்சங்க அதிகாரத்துவக்களும் இனவாத சுவாலைகளை கிளப்பி பாட்டாளி வர்க்கத்தை நஞ்சூட்டி அதனை இரத்தக் களரிக்குள் தள்ளிவிடு முன்னர் அனைத்துலகத் தொழிலாள வர்க்கமானது பாரிய எதிர்த் தாக்குதலை தொடுக்க வேண்டும்.

## ஏர்னெஸ்ட் மண்டேல் உலக ஏகாதிபத்திய ஏஜந்து

யூகொஸ்லாவியாவில் நிகழும் சம்பவங்கள் தோழர் நோர்த், தனது ஆரம்ப அறிக்கையில் குறிப்பிட்டதைப் போல நான்காம் அகிலத்துக்கு தீர்க்கமான முக்கியத்துவம் கொண்டவை. அவை சகல குட்டி முதலாளித்துவக் குழுக்களினதும் வர்க்க தகவமைவுக்கும் வர்க்கப் பண்புக்கும் மற்றுமோர் வரைபடத்தினைவகைப்படுத்திக் காட்டுகின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக அவை உலக முதலாளித்துவத்தின் அரசியல் ஏஜன்சியான பேராசிரியர் ஏர்ணஸ்ட் மண்டேலின் ஐக்கிய செயலகத்தின் பங்கினை தெளிவாக்கிக் காட்டுகின்றன.

அனைத்துலகக் குழு எப்போதும் மண்டேலின் பப்லோவாத அமைப்புகள் உலக ஸ்டாலினிசத்தின் முக்கிய கையாளாக செயற்படுகின்றன. என விளங்கப் படுத்தி வந்துள்ளது. இன்று ஸ்டாலினிச கருவியின் மரணம் அவர்களின் நிச நிகழ்ச்சிநிரலை அம்பலப்படுத்தும் விதத்தில் பப்லோவாதிகள் செயற்பட்டுவந்த மூடுதிரையைக் கிழித்து எறிந்துள்ளது, மண்டேலின் அமைப்பின் சஞ்சிகையான 'இன்டர்நஷனல் வியூ பொயின்ட்' செப்டம்பர் 16ல் பிரசுரித்த ஒரு கட்டுரையில் சேர்பியாவில் மிலோசெவிக் ஆட்சியாளர்களுக்குத் தோல்வியை ஏற்படுத்தும் வகையில் 'ஐரோப்பா முழுமையாக' யூகோசலவியாவில் தலையிடவேண்டும் எனக் கோரியது,

இந்தக் கட்டுரை ஏகாதிபத்தியத்தின் நலன்களைப் பற்றி ஒரு குறிப்பைத் தன்னும் கொண்டிருக்கவில்லை. ஐக்கிய செயலகத்தின் அக்டோபர் 28 பதிப்பில் பிரசுரமான ஒரு அறிக்கையில் பப்லோவாதிகளின் இந்தப் பிற்போக்குத் தகவமைவு இன்னும் அப்பட்டமாக வெளிப் பட்டுள்ளது.

பப்லோவாதிகள் குரோஷியன் அதிகாரத்துவங்களும், 'கொம்பிரதோர்' முதலாளிகளும், பாசிஷ்டுகளும் தொழிலாள வர்க்கத்தினை ஒடுக்கித் தள்ள தமது சொந்த அரச இயந்திரங்களை நிறுவும் உரிமையை பூரணமாக ஆதரிக்கிறார்கள். ஐக்கிய செயலகம் "சுயநிர்ணய உரிமையை ஆதரிக்கின்றது: அதாவது. சுயநிர்ணயத்தினால் சிருஷ்டிக்கப்பட்ட ஆட்சியின் சமூகப் பண்பு பற்றி எதுவித முன்நிபந்தனையும் இல்லாமல் இராணுவ தலையீட்டுக்கு எதிரான சுதந்திரம்.'' பப்லோவாதிகள் குரோஷியன் முதலாளித்துவம் பாசிச உஷ்டாசா ஆட்சியின் பாணியில் ஒரு அரசினை அமைக்கும் உரிமையை ஆதரிக்கிறார்கள்.

நான்காம் அகிலம் சுயநிர்ணய ஜனநாயக உரிமையை காக்கப் போராடுகின்றது.
(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஏகாதிபத்திய யுத்தத்துக்கும் காலனித்துவத்துக்கும் எதிரான உலக மகாநாடு

# சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியாக நான்காம் அகிலத்தைக் கட்டி எழுப்பு!


**நா. அ. அ. கு. வினால் பேர்ளின் நகரில் நடைபெற்ற உலகத் தொழிலாளர் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட பிரேரணை இத்துடன் பிரசுரமாகின்றது. இதை அறிமுகம் செய்து வைத்து நா. அ. அ. குழுவின்பொதுச் செயலாளர். சுவார்ட்ஸ் நிகழ்த்திய உரை அடுத்த இதழில் பிரசுரமாகும்**

ஏகாதிபத்திய யுத்தத்திற்கும்காலனித்துவத்திற்கும்எதிரான இந்த உலகத்தொழிலாளர் மகாநாடு ட்ரொட்ஸ்கிச வேலைத் திட்டத்திற்கான நான்காம் அகிலத்தின் அனைத்துலகக்குழுவின் போராட்டத்தில் ஒரு வரலாற்று மைல் கல்லைக்குறிக்கின்றது. ஸ்டாலினிசத்திற்கும் அதன் முக்கிய அரசியல் முண்டுகோலான பப்லோவாத சந்தர்ப்வாதத்துக்கும் எதிரான நான்காம் அகிலத்தினைக் காக்கும் ஒரு நீண்ட பேராட்டத்தில் இது வோர் உச்சக்கட்டமாகும்.

ஏகாதிபத்திய யுத்தத்துக்கு எதிரான போராட்டம் நான்காம் அகிலத்தினைக் கட்டியெழுப்புவதன் மூலம் பாட்டாளிவர்க்கத் தலைமை நெருக்கடியைத் தீர்த்து வைக்கும் போராட்டமாகும். ட்ரொட்ஸ்கிச இயக்கம் ஆறு தசாப்தங்களுக்கு மேலாக ஸ்டாலினிசம் 1917ன் வரலாற்றுத் தேட்டங்களை அல்லது சோசலிசத்தினை பேணுவதைப் பிரதிநிதித்துவம் செய்தது என்ற பெரும் பொய்க்கு எதிராக சமரசமின்றிப் போராடி வந்தது. இப்போராட்டம், புரட்சிகர மார்க்சிச விதிமுறைக்கான ஒரு உயிர்ப்புஷ்டியான சாட்சியாகும். ஸ்டாலினிசக் கட்சிகள் லெனினதும், போல்ஷிவிக்குகளதும் கட்சியின் தொடர்ச்சியென இலட்சோபலட்சம் தொழிலாளர்கள் தவறாக நம்பிக் கொண்டிருந்த நிலைமைகளின் கீழ் ஆரம்பிக்கப்பட்டு இது ஸ்டாலினிச ஆட்சிகளின் வரலாற்றுச் சரிவின், மூலம், பூரணமாக நிருபிக்கப் பட்டுள்ளது,

அத்தோடு அவற்றின் மரணம், ஸ்டாலினிஸ்டுகள் தொழிலாள வர்க்கத்தின் மேல் ஆதிக்கம் செலுத்த முடிந்த ஒரு முழு வரலாற்று காலப்பகுதியின் முடிவினைக் குறிக்கின்றது. நான்காம் அகிலத்துக்கும் தொழிலாள வர்க்கத்துக்கும் இடையேயான உறவு அடிப்படையான மாற்றம் கண்டுள்ளது.

அடுத்த மாபெரும் புரட்சிகர எழுச்சியின் போது தொழிலாள வர்க்கம் ஒன்றில் அடியோடு செல்வாக்கிழந்துபோன அல்லது முழுமனே சிதறுண்டுபோன ஸ்டாலினிசக் கட்சிகளின் தலைமைகளின் கீழ் வரப்போவதில்லை மாறாக நான்காம் அகிலமும் அதன் பகுதிகளும் இந்த இயக்கத்துக்குத் தலைமை தாங்கும் நிலையில் இருக்கும். எனவே தான் இன்று சந்தர்ப்பவாத ஐக்கிய செயலகத்துடனும் சுலோட்டர், மொரினோவாதிகள் போன்ற நானாவித கிரகங்களான சந்தர்ப்பவாதப் போக்குகளுடனும் அரசியல் கணக்குவழக்குகளைத் தீர்த்துக் கொள்வது தீர்க்கமானதாகியுள்ளது.


லியொன் ட்ரொட்ஸ்கி

ஏர்ணஸ்ட் மண்டேலின் ஐக்கிய செயலக்ம் ட்ரொட்ஸ்கிச இயக்கத்தின் உள்ளேயான ஒரு போக்கினைப் பிரதிநிதித்துவம் செய்யவில்லை. ஆனால் அதன் முழு வரலாறும் வேலைத்திட்டமும் காட்டுவதுபோல் ஏகாதிபத்தியத்தின் ஒரு அரசியல் ஏஜன்சிக்கு குறையாத ஒன்றாகவே தொழிற்படுகின்றது. முழு விஞ்ஞான அர்த்தத்தில் பார்ப்பின் மண்டேல் ஒரு முதலாளித்துவ அரசியல் வாதி.

மாறாக அனைத்துலகக் குழு, நான்காம் அகிலத்தில் உள்ள பல போக்குக்களில் ஒன்றன்றிநான்காம் அகிலமே அதுதான். அது சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியை கட்டியெழுப்பும் வரலாற்றுப் பொறுப்பினைக் கொண்டுள்ளது.

1953ல் சோசலிசத் தொழிலாளர் கட்சியின் தேசியச் செயலாளரான ஜேம்ஸ். பீ. கனனின் பகிரங்கக் கடிதம் ஊடாக அனைத்துலகக்குழு அமைக்கப்படாதிருப்பின் நான்காம் அகிலம் அழிக்கப்பட்டிருக்கும் என்பதில் சந்தேகத்திற்கே இடமில்லை.

மைக்கேல் பப்லோ, ஏர்ணஸ்ட் மண்டேல் தலைமையிலான சந்தர்ப்பவாதப் போக்கு வெறுமனே வெகுஜனங்களின் நெருக்குவாரத்தின் மூலம் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தினை இடது புறம் தள்ளலாம் என்ற நப்பாசையை அடிப்படையாகக் கொண்ட ஸ்டாலினிசசார்பு அரசியல் நிலைப்பாட்டினை மட்டும் முன்வைக்கவில்லை. அது நான்காம் அகிலத்தினையே கரைத்துவிட முயன்றது. சோசலிசத்தினை நிறுவுவது வர்க்க நனவு படைத்த பாட்டாளி வர்க்கத்தின் போராட்டத்தின் பெறுபேறாகும். இந்தப்போராட்டத்தினை அணிதிரட்டுவதும், தலைமைதாங்குவதும் புரட்சிக்கட்சியே. பப்லோவாதம் மார்க்சிசத்தின் மிகவும் இன்றியமையாத இந்த கருந்துப் பாட்டையே நிராகரித்தது.

கலைப்புவாதம் பப்லோ வாதத்தின் சராம்சமாக விளங்கியது - நான்காம் அகிலத்தினை தொழிலாள வர்க்கத்தின் முன்னனிப்படை என்ற நிலையிலிருந்து கரைப்பதும், அதனைத் தொழிலாள வர்க்கத்தையும் ஒடுக்கப்படும் மக்களையும் ஆதிக்கம் செலுத்திய ஸ்டாலினிச, சீர்திருத்தவாத அதிகாரத்துவங்களதும் குட்டி முதலாளித்துவ தேசியவாதிகளதும் முண்டுகோலாக மாற்றுவதுமே.

பப்லோவாதத்தின் .வர்க்க முக்கியத்துவம், யுத்தத்தின் பின்னைய காலப்பகுதியில் ஏகாதிபத்தியத்தினதும் ஸ்டாலினிசத்தினதும் கூட்டு நடவடிக்கைகளைக் காட்டிலும் இந்தப் போக்கினால் அதிகமான ட்ரொட்ஸ்கிசக் காரியாளர்கள் அரசியல்ரீதியில் நாசமாக்கப்பட்டார்கள் என்ற உண்மையில் இருந்து தெளிவாகப் புலப்படுகின்றது.

அனைத்துலகக்குழு மட்டுமே நான்காம் அகிலத்தின் வேலைத்திட்டத்தையும் அடிப்படைக் கொள்கைகளையும் பேணிவந்துள்ளது. 1961ல் பிரித்தானியப் பகுதியான சோசலிசலேபர்லீக் ''பப்லோ. வாதம் ட்ரொட்ஸ்கிசத்தின் ஒரு போக்காகக் கணிக்கப்பட்டவேளையில் இக்காலப் பகுதியை ஒரு முடிவுக்குக் கொணரும் காலம் வந்துவிட்டது'' என்ற முடிவுக்கு வந்தது. எவ்வாறெனினும் இந்த சரியான மதிப்பீட்டிற்கிடையேயும் அனைத்துலகத் தொழிலாளர் இயக்கத்தில் ட்ரொட்ஸ்கிஸ்டுகளாக வலம் வந்துகொண்டு புரட்சிகர முன்னனிப்படையினை குட்டி முதலாளித்துவத் தேசியவாதிகளுக்கும், தொழிலாளர் அதிகாரத்துவங்களுக்கும் அடிபணியச் செய்த பப்லோவாதிகளில் இருந்து நான்காம் அகிலத்தினைப் பிரிக்க அனைத்துலகக் குழுவினால் முடியவில்லை.

பப்லோவாத போக்கினைப் பொறுத்தமட்டில் நான்காம் அகிலத்தின் பலவீனம், அனைத்துலகரீதியில் இருந்துவந்த வர்க்க சக்திகளின் உறவின் ஒரு வெளிப்பாடாக விளங்கியது. பப்லோவாதிகளின் அரசியல் சீர்திருத்தவாத, ஸ்டாலினிச அதிகாரத்துவங்களையும் அத்தோடு யுத்தத்தின் பின்னய காலப்பகுதியில் பரந்த தளத்தினைக் கொண்டிருந்த புதிய மத்தியதர வர்க்கங்களையும் அடிப்படையாகக் கொண்டிருந்தது.

ஏகாதிபத்திய ஆட்சியைப் பராமரிப்பதில் பப்லோவாதிகளின் ஆதிக்கம் ஒரு தீர்க்கமான பாத்திரத்தினை வகித்தது. ஸ்டாலினிசத்தின் கணிசமான அளவு பலவீனங்களுக்கிடையேயும் நான்காம் அகிலம் முதலாளித்துவ நெருக்கடியின் முழுப் பயனையும் அடைய முடியவில்லை. 1968—75 காலப்பகுதியில் தொழிலாள வர்க்கத்தின் ஒரு அனைத்துலக கிளர்ச்சி நிலைமையில் அது வளர்ச்சி கண்டதோடு அதன் மூலம் ஏகாதிபத்தியம் மீண்டும் ஒருதடவை தனது ஆட்சியை மீளஸ்திரப்படுத்த ஸ்டாலினிச, சீர்திருத்தவாத ஏஜன்சிகளைப் பயன்படுத்திக் கொள்ளமுடிந்தது. பின்னர் 1970பதுகளின் கடைப் பகுதியில் இருந்து தொழிலாள வர்க்கத்துக்கு எதிராக ஒரு எதிர்த்தாக்குதலைத் தொடுக்க முடிந்தது.

இருப்பினும் பப்லோவாதத்தினை உருவாக்கிய வர்க்க அழுத்தங்கள் அனைத்துலகக் குழுவின் உராயவே செய்தன. சோ. தொ. க.க்கு எதிரான போராட்டத்துக்குத் தலைமை தாங்கிய பிரித்தானிய சோசலீச லேபர் லீக் ஒரு சந்தாப்பவாத திசையில் செல்லத் தொடங்கியதோடு, 1972 அளவில் ட்ரொட்ஸ்கிச வேலைத்திட்டத்துக்காக தொழிலாளர் இயக்கத்தில் நடாத்தும் போராட்டத்தின் மூலம் தொழிலாள வர்க்கத்தினை வென்றெடுக்க முடியாது என்ற கருத்துப்பாட்டினை முன்வைத்தது.

பிரித்தானிய அமைப்பினுள் தோன்றிய சந்தர்ப்பவாதப் போக்குக்கள் இன்று அனைத்துலகக் குழுவை நிர்மூலமாக்க முயன்றுள்ளன. 1980பதுகளின் ஆரம்பத்தில் ஹீலியும் சுலோற்றரும் அனைத்துலகக் குழு, நான்காம் அகிலத்தைப் பிரதிநிதித்துவம் செய்யவில்லையென்றும் அது சோசலிசப் புரட்சியின் உலகக்கட்சியின் உயிரணு மட்டுமே என்ற கருத்துப்பாட்னட முன்வைத்தனர். அத்தகைய ஒரு சூத்திரமாக்களின் நோக்கம், ஒரு உலகக் கட்சியைக் கட்டிஎழுப்பும் பொருட்டு ட்ரொட்ஸ்கிச இயக்கம் அதன் வேலைத்திட்டத்தினை குட்டி முதலாளித்துவ சக்திகளுக்கு இயைந்து போகச் செய்ய வேண்டும் என்ற கருத்துப்பாட்டினை அடிப்படையாகக் கொண்ட ஒரு மத்தியவாத மறுகுழுத் திரள்வில் பங்குகொள்ளச் செய்வதன் மூலம் அனைத்துலகக் குழுவின் பகுதிகளைப் கட்டுப்படுத்தவே.

தொழிலாளர் புரட்சிக் கட்சித் தலைமையின் கலைப்புவாதத்தின்புறநிலை முக்கியத்துவத்தினை இப்போது தெளிவாகக் காண முடியும். ஏகாதிபத்தியத்தின் முக்கிய அரசியல் ஏஜன்சிகளான ஸ்டாலினிஸ்டுகளும் சீர்திருத்தவாத அதிகாரத்துவங்களும் இறுதி நெருக்கடிக்குள் 'நுழைந்து கொண்டுள்ளதால் அவர்களைத் தூக்கிப்பிடித்து வந்த ஏகாதிபத்தியமும், பப்லோவாத சக்திகளும் என்றுமில்லாதவாறு அனைத்துலகக் குழுவைகலைத்துவிடும்பெரும் அவசியம் கொண்டுள்ளன. 1982 இறுதியில் சோ. தொ. கட்சியின் தேசியச் செயலாளரான ஜக் பார்ன்ஸ் ஏகாதிபத்திய முன்நோக்கினைச் சுருக்கிக் கூறுகையில் அடுத்த தசாப்தத்தில் எவருமே தம்மை ட்ரொட்ஸ்கிஸ்டுகள் என அழைக்கமாட்டார்கள் என்றார்.

1982ல் வேர்க்கஸ் லீக்கினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட போராட்டத்தின் புறநிலை முக்கியத்துவத்தினை இன்று கண்டு கொள்ள முடியும். தொழிலாளர் புரட்சிக் கட்சித் தலைமையின் சந்தர்ப்பவாத மூலகங்கள் தோற்கடிக்கப்பட்டமையும் சுலோற்றர்-பண்டா போக்கு ஒட்டிக் கலைக்கப்பட்டமையும்ட்ரொட்ஸ்கிஸ்டுகள் திரும்பவும் தமது சொந்த அமைப்பினை கட்டுப்படுத்துவதை உத்தரவாதம் செய்தது. இந்தப் பிளவு ஏற்படாது இருந்திருக்குமானால் முழு ஸ்டாலினிச அதிகாரத்துவமும் கவிழ்ந்து கொட்ட இருந்த தருணத்தில் அனைத்துலகக் குழு கொர்பச்சேவின் ஒரு அரசியல் முண்டுகோலாக மாற்றப் பட்டிருக்கும்.

அனைத்துலகக் குழுவின் தலைமையின் கீழ் நான்காம் அகிலம் இந்தச் சந்தர்ப்பவாதிகளை தோற்கடித்ததன்மூலம் ஒரு பொது வேலைத்திட்டத்தின் அடிப்படையில் உலகின் பல்வேறுபட்ட பிராந்தியங்களையும் சேர்ந்த காரியாளர்களை ஐக்கியப்படுத்தும் அரசியல் ரீதியில் ஒரே சீரான அமைப்பாகியுள்ளது. தொழிலாள வர்க்கத்தினைப் பிளவுபடுத்தவும் அதனை தேசிய அரசு முறையுடன் கட்டிப் போடவும் முயலும் சகல வடிவிலான சந்தர்ப்பவாதங்களுக்கும் எதிரான ஒரு போராட்டத்தில் நான்காம் அகிலத்தை கட்டி எழுப்புவதன் ஊடாக தொழிலாள வர்க்கத்தின் அனைத்துலக ஒழுங்கிணைப்பு இடம்பெறுகின்றது என்பதை இது நடைமுறையில் எடுத்துக்காட்டியுள்ளது.

அதன் காரியாளர்களை ஒருங்கிணைப்பதன் மூலம் நான்காம் அகிலம் பப்லோவாத சந்தர்ப்பவாதத்துக்கு எதிரான யுத்தத்தினை ஒரு

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிலாள வர்க்கத்தை உலகளாவிய ரீதியில்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

க்கு ஏற்ப இந்நாடுகளை மறுபங்கீடு செய்யவும் ஏகாதிபத்தியவாதிகள் தாமே தலையிட்டு வருகின்றார்கள்.

இந்த ஆட்சிகளுள், முதலாளித்துவக் கட்சிகளுள் பிளவுகள் ஏற்பட்டு வருகின்றன. உதாரணமாக அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதியான கார்ள் ஹில் இந்தியாவுக்கு விஜயம் செய்த வேளையில் பிரபல்யமான முதலாளித்துவப் பத்திரிகையான 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஒரு ஆசிரியத் தலையங்கத்தை தீட்டியது. அது கூறியதாவது:- ''அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதி திருமதி கார்ள் ஹில் இந்நாட்டின் அபிலாசைகளைப் பற்றி புதுடில்லியில் காட்டிய புரிந்துணர்வின்மையால் இந்திய -அமெரிக்கப் பொருளாதார உறவுகளைப் பலப்படுத்தும் நம்பிக்கைகளை ஆட்டம் காணச் செய்துள்ளாள்'' என்றது.

உண்மையில் இந்நாடுகளில் உள்ள முதலாளி வர்க்கம் ஏகாதிபத்தியச்சார்பு 'கொம்பிரதோர்' முதலாளி வர்க்கம் முகம் கொடுத்துள்ள பரிதாபகரமான நிலைமையை ஏகாதிபத்தியவாதிகள் புரிந்து கொள்ள வேண்டும் என இன்னமும் எதிர்பார்க்கின்றது. அத்தோடு அந்த ஆசிரியத் தலையங்கம் ஒருபயமுறுத்தல் போல் இறுதியாக கூறுவதாவது: ''வர்த்தகக் கூட்டுக்களாக துரிதமாகப் பிளவுண்டு வரும் ஒரு உலகில் இந்தியா அத்தகைய அப்பட்டமான நெருக்குவார உத்திகளை எதிர் கொள்ளத்தக்க பிரதிபலிப்புக்களை விரைவில் அபிவிருத்தி செய்தாக வேண்டும்'' என்றது.

இன்று இவர்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தினால் தம் மீது திணிக்கப்பட்டுள்ள நெருக்குவாரங்களுக்கும் சுமைகளுக்கும் எதிரான ஒரு இரட்சகர் எனக் கணிக்கக் கூடிய மற்றுமோர் வர்த்தகக் கூட்டினைத் தேடுவதில் தமது ஆசனங்களைத் திருப்பியும், முறுக்கியும் வருகிறார்கள். ஆனால் அத்தகைய ஏகாதிபத்தியக் கூட்டுக்கள் கிடையாது. ஏகாதிபத்தியம் என்பது, முதலாளி வர்க்கத்தின் ஒரு பிரிவினரின் வெறும் கொள்கை அல்ல. அதற்கேயுரிய தாக்கங்கள் உள்ளன. இது அமெரிக்க ஏகாதிபத்தியம் என்றால் என்ன அல்லது ஜப்பானிய ஏகாதிபத்தியம் என்றால் என்ன அல்லது ஜேர்மன் ஏகாதிபத்தியம் என்றால் என்ன இதுவோர் வரலாற்று அபிவிருத்தியாகும்.

இந்நிலைமைகளின் கீழ் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் குடை நிழலிலும் ஆதரவிலும் கடந்த காலத்தில் நிறுவப்பட்ட இந்தச் சகல பிராந்திய ஒத்துழைப்பு அமைப்புக்களும் பிளவுண்டு போவதை நாம் காண்கின்றோம். தென் ஆசியாவில் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், பூட்டான், இலங்கை இடையே நிறுவப்பட்ட பிராந்திய ஒத்துழைப்புக்கான தென் ஆசிய சங்கம் நவம்பர் 6ம் 7ம், 8ம் திகதிகளில் தமது வருடாந்த மகாநாட்டினைகூட்ட முடியவில்லை. பூட்டான் கலந்து கொள்ள மறுத்ததாலும் அந்த அடிப்படையில் இந்தியா பங்கு கொள்ள மறுத்ததாலும் அதை இரத்துச்செய்ய நேரிட்டது. இது சரிந்தது.

ஏனைய ஏகாதிபத்திய முகாம்கள் தமது பங்கினையும், பிராந்தியங்களையும் பாதுகாக்கும் பொருட்டு இந்நாடுகளில் திட்டவட்டமாகத் தலையிட்டு வருகின்றன. 1947ல் இந்தியா, பாகிஸ்தான், இந்தியா எனப் பிரிக்கப்பட்டது. இது போதுமானதல்ல. தொழிலாள வர்க்கத்தினைப் பிரிக்கவும் ஒரு பிரிவினரை மறுபிரிவினருக்கு எதிராகத் தூண்டிவிடவும் இன்று இது மீளப் பங்கிடப்படவுள்ளது. ஏகாதிபத்தியவாதிகள் இந்நாடுகளில் தலையிடவும், அவற்றைச் சுரண்டவும் ஒரே வழி அதுவே,

## இலங்கை முதலாளி வர்க்க நெருக்கடி

இதே விதத்தில் இலங்கை ஆட்சியாளர்களிடையேபிளவுகள் ஏற்பட்டு வருவதை நாம் காண்கின்றோம். இலங்கை ஜனாதிபதிக்கு எதிராக அவரின் சொந்தக் கட்சியின் ஒரு பிரிவினரால் அரசியல் குற்றச்சாட்டு பிரேரணை கொணரப்பட்டது ஆனால் இந்த அரசியல் குற்றச்சாட்டுப் பிரேரணை சரிந்தது. பெப்ரவரி புரட்சிக்கு முன்னர் 1917ல் ரூஷ்யாவில் இருந்த நிலைமையை ட்ரொட்ஸ்கி விளக்கியதை ஒருவர் நினைவு கூராமல் இருக்க முடியாது. போர் முனைகளில் இருந்து வந்த தளபதிகள், யுத்தம் தொடர்ந்தும் ஸாரின் கீழ் நடாத்தப்படுமானால் ஒரு பேரழிவுக்கு இட்டுச் செல்லும் என்பதை எப்படி அறிவித்தார்கள் என்பதைட்ரொட்ஸ்கி விளக்கினார். ட்ரொட்ஸ்கி மீண்டும் கூறுகையில் ''இது தொடர்ந்தும் நடாத்தப்படுமானால்!'' அப்போது இன்னுமோர் தளபதி எழுந்து கூறியதாவது: ''ரூஷ்யா, ஸார் இவைகளில் ஒன்றை நான் தெரிவு செய்ய நேரிடுமானால் நான் ரூஷ்யாவை தெரிவு செய்வேன்.'' ட்ரொட்ஸ்கி மீண்டும் கூறுகையில் ''நான் தெரிவு செய்ய நேரிடுமானால்!''

ஆட்சியாளருக்கு எதிரானவர்களாக நடிக்கும் முதலாளி வர்க்கப் பிரிவினரின் பரிதாபகரமான நிலைமை இப்படியே உள்ளது. ஆதலால் இலங்கையில் அரசியல் குற்றச்சாட்டுப் பிரேரணை கவிழ்ந்தது. அதே விதத்தில் பெப்ரவரிப் புரட்சியில் ஸாரைத் தூக்கி வீச ரூஷ்யத் தொழிலாள வர்க்கமும் ஒடுக்கப்படும் மக்களும் தலையிட வேண்டியிருந்தது. ஒடுக்கப்படும் மக்களின் தலைமையில் தொழிலாள வர்க்கத்தினை அணிதிரட்டியபோல்ஷிவிக்குகளின் தலைமையிலேயே வெற்றி கிட்டியது. அவ்வாறே இந்தப் பின்தங்கிய நாடுகளில் ஏகாதிபத்தியச் சார்பு ஆட்சியாளர்களைத் துடைத்துக் கட்டுவதற்கு தொழிலாள வர்க்கமும் ஒடுக்கப்படும் மக்களும் உலகளாவிய ரீதியில் ஏகாதிபத்தியத்துடன் போராடி அதைத் தோற்கடிக்கும் பொருட்டு முன்னேறியநாடுகளின்தொழிலாள வர்க்கத்துடன் ஒன்றிணைந்து தலையிடவேண்டியுள்ளது.

இந்நிலைமையிலேயே நாம சகல தொழிற்சங்க அதிகாரத்துவங்களதும் குட்டி முதலாளித்துவ அமைப்புக்களதும் பூரண வங்குரோத்தினையும் பிற்போக்குத் தன்மையையும் காண்கின்றோம்.

இலங்கையில் இதே விதத்தில் முதலாளித்துவம் பிளவுபட்டுப்போவதோடுதமிழரின் உரிமைகளுக்குப் போரிடுவதாகக் கூறிக்கொள்ளும் தமிழ்ஈழ விடுதலைப் புலிகள் போன்ற குட்டி முதலாளித்துவக் குழுக்கள் இரட்டைக் கொள்கைகளை மட்டுமன்றி சில வேளைகளில் மூவகைக் கொள்கைகளையும் கடைப்பிடிக்கின்றன. ஒரு கணம் அவர்கள் ஆட்சியாளருக்கு எதிராக ஆயுதமும் கையுமாகப் போராடுகின்றார்கள். அப்போது அவர்கள் பிரேமதாசாவை அகற்ற ஏனைய முதலாளித்துவ கோஷ்டிகள் எடுக்கும் நடவடிக்கைகளை ஆதரிப்பதாகக் கூறும் அறிக்கைகளை வெளியிடுகின்றார்கள். மறுபுறத்தில் அவர்கள் மற்றோர் இயக்கமான ஈரோஸ் ஊடாக பிரேமதாசாவை ஆதரிக்கவும் அரசியல் குற்றச்சாட்டுப் பிரேரணையை தோற்கடிக்கும் தமது கருத்தை பாராளுமன்றத்தில் அறிவிக்கின்றார்கள்.

குட்டி முதலாளித்துவ தேசியவாதிகளின் பரிதாபகரமான நிலைமையை இது காட்டுகின்றது. பீ.எல்.ஓ.சம்பந்தமாகவும் நாம் காண்பது இதுவல்லவா? ஆபிரிக்க தேசிய காங்கிரஸ்' சன்டினிஸ்டாஸ், ஒடுக்கப்படும் தேசிய இனங்களைப் பிரதிநிதித்துவம் செய்வதாகவும் ஏகாதிபத்திய, சோவினிச, இனவாத ஆட்சியாளர்களுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் கூறிக்கொள்ளும் ஏனைய சகல அமைப்புக்களின் தலைமை சம்பந்தமாகவும் நாம் காண்பது இது வல்லவா?

தொழிற் சங்க அதிகாரத்துவங்களின் பிற்போக்குக் கொள்கைகளின் சரிவு இதிலிருந்து வேறுபட்டதல்ல. சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகள் தொழிலாள வர்க்கத்தினதும் ஒடுக்கப்படும் மக்களதும் வெறுப்பையும், எதிர்ப்பினையும் பூரணமாக வெற்றி கொண்டுள்ளன. இந்நிலைமைகளின் கீழ் தோழர், நோர்த் தமது ஆரம்ப அறிக்கையில் சுட்டிக்காட்டியது போல் நவ சமசமாஜக் கட்சி இன்று பப்லோவாதிகளின் அணியில் சேர்ந்து கொண்டுள்ளது.

நவ சமசமாஜக் கட்சியின் 'றெக்கோட்' என்ன? அரசியல் குற்றச்சாட்டுப் பிரேரணைக்கு ஆதரவளித்த வண்ணம் யூ. என். பி. யில் இருந்து வெளியேறிய கன்னையின் பின்னால் முழுமனே இழுபடுகின்றனர். இந்த அரசியல் குற்றச்சாட்டுப் பிரேரணை உலகின் 'தாராண்மை ஏகாதிபத்தியவாதிகளால்' ஆதரிக்கப்படுவதாக அவர்கள் அப்பட்டமாகவே குறிப்பிட்டனர். அவர்கள் தாராண்மையான ஏகாதிபத்தியக் கன்னை ஒன்றைக் கண்டுபிடித்துள்ளனர். இந்த தாராண்மை ஏகாதிபத்தியவாதிகள் இலங்கை மீண்டும் 'வெஸ்ட்மினிஸ்டர்' பாணி பாராளுமன்ற ஆட்சிக்குத் திரும்பிச் செல்வதை ஆதரிப்பதாகவும் அதனால் தாம் இதை ஆதரித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

அவர்கள் ஒடுக்கப்படும் தமிழ் மக்களுக்கு எதிரான இனவாத யுத்தத்தினை முழுமையாக ஆதரிக்கின்றார்கள். கிராமப்புற இளைஞர்களை இலட்சக்கணக்கில் கொல்வதை அவர்கள் ஆதரிக்கிறார்கள். தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பான அவர்களின் கோரிக்கை என்னவெனில் அவர்கள் முதலாளித்துவ நீதிமன்றங்களில் வழக்கு விசாரனைக்கு நிறுத்தப்பட வேண்டும். குற்றவாளிகளாகக் காணப்படாதோர் விடுதலை செய்யப்பட வேண்டும்!

ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ ஆட்சியின் சட்டமும் ஒழுங்கு அமைப்பினை இவர்கள் பூரணமாக ஆதரிக்கிறார்கள். எனவேதான் நாம் கூறுகின்றோம்: எங்கனம் மண்டேல் ஒரு முதலாளித்துவ அரசியல்வாதியோ அதேவிதத்தில் இவர்களும் முதலாளித்துவ அரசியல்வாதிகள் என்று. தொழிலாள வர்க்கம் இந்த அதிகாரத்துவங்களைத் தூக்கி வீச வேண்டும்.

இந்த மகாநாட்டில் நாம் சோசலிசத்துக்கான வேலைத் திட்டத்தினை உள்ளடக்கிய அல்லது நிச ஏகாதிபத்திய எதிர்ப்புக்காகப் பேச நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினால் பிரதிநிதித்துவம் செய்யப்பட்ட இந்த இயக்கத்துக்கு வெளியே எதுவித போக்கும் கிடையாது என்பதை ஊர்ஜிதம் செய்தாக வேண்டும். ஏகாதிபத்திய யுத்தத்துக்கும் காலனித்துவத்துக்கும் எதிராக உலகம் பூராவும் தொழிலாள வர்க்கத்தினையும் ஒடுக்கப்படும் மக்களையும் அணிதிரட்டப் போகும் இயக்கம் இதுவே.

எனவேதான் நான்காம் அகிலம் இதுவே எனப் பிரகடனம் செய்வது பொருத்தமானது. இந்த இயக்கத்துக்கு வெளியே நான்காம் அகிலத்தினைப் பிரதிநிதித்துவம் செய்யும் வேறு போக்குக்கள் கிடையாது. அந்த அடிப்படையில் உலகம் பூராவும் உலக சோசலிசப் புரட்சியின் வெற்றிக்கான புரட்சிகர அனைத்துலகத் தலைமையாக நான்காம் அகிலத்தினைக் கட்டி எழுப்ப வாக்குறுதியளிக்கும் மகாநாடாக இதை நாம் கொள்ள வேண்டும்.

# யுத்தத்துக்கு எதிரான போராட்டம்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் சுயநிர்ணய உரிமை என்ற வேஷத்தின் கீழ் முதலாளி வர்க்கம் அதன் சொந்த அரச இயந்திரத்தினை அமைக்கும் உரிமையை நாம் மூர்க்கமாக எதிர்க்கின்றோம். உண்மையில் சுய நிர்ணயத்துக்கான ஜனநாயக உரிமை முதலாளி வர்க்கத்தினால் நிறுவப்பட்ட எந்தவொரு அரசின் கீழும் யதார்த்தமாக முடியாது. அனைத்துலகத் தொழிலாள, வர்க்கம் அதனைத் தூக்கிவீசுவதன் மூலம் மட்டுமே யதார்த்தமாகும். ஏகாதிபத்தியம், பாசிசம் தொடர்பானஏனைய சகல சந்தர்ப்பவாதப் போக்குக்களது வர்க்கத் தகவமைவினை யூகோசலவிய உள் நாட்டு யுத்தம் பற்றிய அவர்களின் நிலைப்பாட்டில்கண்டு கொள்ளலாம்.

சுலோற்றரின் போலி நான்காம் அகிலத்தை மீள கட்டியெழுப்பும் 'தொழிலாளர் அனைத்துலகம்' யூகோசலவியா நெருக்கடி பற்றி மூன்று மாதங்கள் மௌனம் சாதித்தது. அவர்களின் பத்திரிகைகளில் 'யூகோசலவியா' என்ற பெயர் கூடக் குறிப்பிடப்படவில்லை. இறுதியில் இந்த மௌனம் யூகோசலவியா அங்கத்தவர் என அவர்கள் குறிப்பிடும் ஒருவருடன் நடாத்திய பெரும் பேட்டியை 'வேர்க்கஸ் பிரஸ்' அக்டோபரில் பிரசுரித்ததுடனேயே கலைந்தது. இது என்ன பேட்டி!

அவர் பிரகடனம் செய்ததாவது: தேசியவாதம் ஆளுமை கொண்ட சக்தியாகியுள்ளது. ஸ்டாலினிசம் ''சோசலிசத்தினை பயங்கரமாக சமரசம் காணச் செய்துள்ளது.'' 'தலைதப்பி ஓடும் மன்னன் கூட உயிரைப் பிடிப்பதையே வழியெனக் கொள்ளும் அளவுக்கு ஒடுக்கப்படும் மக்கள் வறுமைக்கும் அவல நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர். இதன் பெறுபேறாக 'எல்லாமே எமக்கு எதிராக அமைந்துள்ளன' என்றார்.

இத்தகைய ஒரு பிற்போக்கானதும் கோழைத்தனமானதுமான பேட்டியைப் பிரசுரித்ததன் நோக்கம் ஒன்றே. குரோஷியன் பாசிஸ்டுகளை ஆதரிப்பதிலும் ஏகாதிபத்தியச் சக்திகளின் தலையீட்டை ஆதரிப்பதிலும் மண்டேலைப் போலவே சுலோற்றரும் ஒரே பாதையிலேயே பயணம் செய்கின்றனர்.

காலஞ்சென்ற நகுல் மொறினோவின் ஆர்ஜன்ரைனா அமைப்பான 'இன்டர்நஷனல் வேர்க்கஸ் லீக்' எனப்படுவது ருட்ஜ்மன் ஆட்சியுடனும் அதன் ஜேர்மன் ஏகாதிபத்திய ஆதரவாளர்களுடனும்இணைந்து கொண்டு குரோஷிய மக்களுடன் ஐக்கியத்துக்கு அழைப்பு விடுக்கின்றது. இந்த மொரினோவாதிகள் ஒவ்வொரு நாட்டினதும் தொழிலாளர்களை இரண்டு சுலோகங்களின் அடிப்படையில் ஒரு போராட்டத்தை முன்னெடுக்கும்படி அழைக்கின்றனர். அவர்கள் கூறுவதாவது ''குரோஷியாவில் இருந்து சமஷ்டி இராணுவம் வெளியேறு! குரோஷியா — சுலோவீனியாவின் சுதந்திரத்தினை உடனடியாக அங்கீகரி:''

இந்தக் கோரிக்கைகள் உண்மையில் ஜேர்மன் ஏகாதிபத்தியத்தின் வெளிநாட்டுக் கொள்கைப் பிரதிநிதி —வெளிநாட்டு அமைச்சர் ஹன்ஸ் டைரிட்ஜ் கென்ஸரினால் முன்வைக்கப்பட்டவற்றில்இருந்து வேறுபட்டதல்ல. அவர்இவற்றினை அமுல் செய்ய ஐரோப்பிய தலையீட்டுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

யுத்தம் சகல கட்சிகளையும்வேலைத்திட்டங்களையும் பரீட்சைக்குள்ளாக்குகின்றது லெனினால் அவரது கால சந்தர்ப்பவாதிகளுக்கு எதிராகத் தொடுத்த போராட்டம் போலவே பப்லோவாதத்துக்கு எதிரான அனைத்துலகக் குழுவின் நீண்ட போராட்டம் மூக்கியத்துவம்மிக்கது. தொழிலாள வர்க்கத்தினுள் முதலாளி வர்க்கத்தின் ஏஜன்டுகளாகச் செயற்படும் சமூக ஜனநாயகவாதிகளுக்கு எது விதத்திலும் குறையாத விதத்தில் பப்லோவாதிகள் ஏகாதிபத்தியத்தின் ஒரு அப்பட்டமான ஏஜன்சியாகும். இதிலும் ஏனைய பிரச்சினைகளிலும் அவர்களின் நிலைப்பாடு இதைக் காட்டுகின்றது.

அனைத்துலகக் குழு மட்டுமே நான்காம் அகிலத்தைப் பிரதிநிதித்துவம் செய்கின்றது. இந்தச் சகல சந்தர்ப்பவாதிகளையும் அம்பலப்படுத்தி, ஓட்டிக் கலைப்பதன் மூலம்இது சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியாகக் கட்டி எழுப்பப்படவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியாக...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

வேறுபட்ட அடிப்படையில நடாத்துகின்றது, பப்லோவாத அமைப்புக்களது அரசியல் நம்பிக்கையை பூரணமாக ஒழித்துக்கட்டவும், அனைத்துலகக் குழு மட்டுமே நான்காம் அகிலத்தினைப் பிரதிநிதித்துவம் செய்கின்றது என்பதையும் மண்டேலின் அரசியலுக்கும் ட்ரொட்ஸ்கிச வேலைத்திட்டத்துக்கும் எதுவித தொடர்பும் கிடையாது என்பதையும் அனைத்துலகத் தொழிலாள வர்க்கத்தின் வர்க்க நனவான முன்னணிப் படையினுள்ளே நிலைநாட்டவும் இன்று வாய்ப்பு உள்ளது.

சந்தர்ப்பவாதிகள் ட்ரொட்ஸ்கிஸ்டுகளாக வேஷம் தாங்க முடிந்த நீண்ட காலப்பகுதி ஒரு முடிவுக்கு வந்துள்ளது. மண்டேலின் ஐக்கிய செயலகமும் அதைச் சுற்றிச் சுழலும் நானாவித செயற்கை கிரக குழுக்களும் ட்ரொட்ஸ்கிச இயக்கத்தின் கட்டுமானத்தினுள் ஒரு போக்கினைப் பிரதிநிதித்துவம் செய்யவில்லை. அவர்களின்வரலாறும் வேலைத்திட்டமும்அவர்களைஏகாதிபத்தியத்தின்அரசியல் ஏஜன்சிகளாகக் அம்பலமாகியுள்ளது.

ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் சரிவுடனும், சமூக ஜனநாயக, தொழிற்சங்க கருவிகளுக்கு எதிரான தொழிலாள வர்க்கத்தின் ஆழமாகி வரும் கிளர்ச்சியுடனும் மண்டேலின் ஐக்கிய செயலகம் உலக ஏகாதிபத்தியத்துக்கு முக்கிய சேவையாற்றுகின்றது.

அதன் பழைய முண்டுகோல்கள் முழுமனே சிதறுண்டு போயுள்ள நிலையில் தமது ஆட்சியை நடாத்தவும் அனைத்துலகக் குழுவின் ட்ரொட்ஸ்கிஸ்டுகளுக்கும் அவர்கள் போராடிவரும் சோசலிச அனைத்துலகவாத வேலைத்திட்டத்திற்கு எதிராக குட்டி முதலாளித்துவ தீவிரவாதிகளின் பிரிவுகளை அணிதிரட்டவும் ஏகாதிபத்தியத்துக்கு அவசியப்படும்அரசியல்பொறிமுறையை ஒன்றிணைப்பதே அதன் திட்டவட்டமான தொழிற்பாடாகும்.

அனைத்துலகக் குழுவிற்கும் மண்டேலின் ஐக்கிய செயலகத்திற்கும் இடையேயான மோதுதல், நேருக்குநேர் எதிரான வர்க்க நோக்கங்கள் கொண்ட வேறுபட்ட வர்க்க சக்திகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் இரண்டு அமைப்புக்களுக்கு இடையேயான ஒரு போராகும். இது ஸ்டாலினிச ஆட்சிகளின் சரிவின் பின்னர் ஏகாதிபத்தியத்திற்கு இன்று வழங்கி வரும் தெளிவானதும் அப்பட்டமானதுமான ஆதரவின் மூலம் உச்சக் கட்டத்தினை அடைந்துள்ள பல தசாப்தகால மண்டேலின் போக்கின் வரலாற்றினால் வெளிப்பட்டுள்ளது.

நான்காம் அகிலம் நடாத்திய போராட்டத்தின் வரலாறு பூராவும் இந்த 'ருஷ்ய பிரச்சினை' எப்போதும் போக்குக்களதும், அமைப்புக்களதும் வர்க்கத் தகவமைவுக்கான ஒருசோதனையாகத் தொழிற்பட்டு வந்துள்ளது. மண்டேலும் அவரது ஐக்கிய செயலகமும் கொர்பச்சேவையும் அவரது முதலாளித்துவ புனருத்தாரண வேலைத்திட்டத்தினையும் அப்பட்டமாக அங்கீகரித்ததோடு அதற்கு ஆதரவளிக்கப்பட வேண்டும் எனப் பிரகடனம் செய்தனர். சோவியத் அதிகாரத்துவத்தின் தலைவரை இருபதாம் நூற்றாண்டின் மாபெரும் அரசியல் புள்ளிகளில் ஒருவர் எனப் பாராட்டினர்.

போலந்திலும் கிழக்கு ஜேர்மனியிலும் மண்டேல் முதலாளித்துவ புனருத்தாரணத்தினதும், தொழிலாள வர்க்கத்துக்கு எதிரான எதிர்ப் புரட்சியினதும் அமைப்பாளர்களில் ஒருவராகச் செயற்பட்டார். அவரின் நீண்டகால சீடனான ஜக் குரான், சர்வதேச நாணய நிதியம் ஏற்பாடு செய்த 'அதிர்ச்சி வைத்தியத்தை' ஆரம்பித்து வைத்து; முதலாவது சொலிடா ரிட்டி அரசாங்கத்தில் தொழில் அமைச்சராகச் செயற்பட்டார். அந்த அரசாங்கம் தொழிலாள வர்க்கத்தின் வாழ்க்கைத் தரங்களை சிதறடித்ததோடு வேலையில்லாத் திண்டாட்டத்தை புதிய மட்டத்துக்கு உயர்த்தியது. ஜேர்மன் ஜனநாயக குடியரசின் சரிவு, ஸ்டாலினிச அதிகாரத்துவத்துக்கு மண்டேலின் ஆதரவின் வர்க்க முக்கியத்துவத்தினை அம்பலப்படுத்தியது. 1953 ஜூன் கிழக்கு ஜேர்மன் தொழிலாளர்களின் கிளர்ச்சி எழுச்சிக் காலத்தில் இருந்தே இந்த அதிகாரத்துவம் சீர்திருத்தங்களை வழங்க நெருக்கப்பட முடியும் என்ற கருத்துப்பாட்டினை முன்வைத்தது. மண்டேலும் ஐக்கிய செயலகமும் தொழிலாள வர்க்கத்தினால் ஸ்டாலினிச இயந்திரத்தினைப் புரட்சிகரமான முறையில் தூக்கிவீசுவதை எப்போதும் எதிர்த்து வந்துள்ளனர். இந்த உண்மை அதிகாரத்துவத்தினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அது தொழிலாள வர்க்கத்தினால் தூக்கிவீசப்படுவதை கையாலாகாத்தனமானமுறையில் தடுக்கும் முயற்சியாக கிழக்கு ஜேர்மன் ஆட்சியாளர்கள் நேரடியாக மண்டேல் பக்கம் திரும்பினர். நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் ஜேர்மன் பகுதியான BSA கிழக்கு ஜேர்மனியினுள் தலையிட்டுதொழிலாளர்சபைகளையும் நிச தொழிலாளர் ஜனநாயகத்தினையும் நிலைநிறுத்துவதன் ஊடாக ஸ்டாலினிச ஆட்சியைத் தூக்கி வீசும்படி விடுத்த அழைப்பு காரணமாக BSAன்'வெளியார் தலையீட்டை' கண்டிக்கும் பொருட்டு இரெனிஸ் ஆட்சியாளர்களால் மண்டேல் கிழக்கு ஜேர்மனியினுள் கொணரப்பட்டார்.

எவ்வாறெனினும் மண்டேல் யூகோசலவாக்கியாவில் ஐரோப்பிய ஏகாதிபத்திய சக்திகளின் தலையீட்டை ஆதரிப்பதோடு குரோஷியாவிலும் ஏனைய குடியரசுகளிலும் பாசிஸ்டுகள் தமது சொந்த அரச இயந்திரங்களை அமைப்பதை ஆதரிக்கின்றார். ஐக்கிய செயலகத்தின் அரசியல் பண்பு அதன் கடைசி காங்கிரசில் இலங்கை நவசமசமாஜக் கட்சியை அதன் அணியில் சேர்த்துக் கொள்ள ஆதரவளிக்கும் தீர்மானம் மூலம் நிலைநிறுத்தப்பட்டது. நவ சமசமாஜ கட்சி ஒரு முதலாளித்துவ கட்சி. அது தமிழ் வெகுஜனங்களையும் தொழிலான வர்க்கத்தினையும் ஒடுக்குவதற்குப் பாறுப்பான முதலாளித்துவ அரசியல்வாதிகளுடனும் இராணுவ தலைவர்களுடனும் வெளிவெளியாகச் செயற்படுகின்றது, நவ சமசமாஜக் கட்சியின் அரசியல் பாத்திரம் பற்றி எதுவித சந்தேகத்துக்கும் இடம் கிடையாது. இது 1917ல் தமிழ் மக்களின் சுயநிர்ணய போராட்டத்தினை நசுக்குவதை நோக்கமாகக் கொண்ட வட்டமேசை மகாநாட்டில் பங்கு கொண்டதும் தொழிலாள வர்க்கத்தில் இருந்து யூ. என். பி. ஆட்சிக்கு எதிரான எதிர்ப்பினை தடைசெய்கின்றதுமான ஒரு அப்பட்டமான முதலாளி வர்க்கக் கட்சியாகும்.

அனைத்துலகக் குழு, சுலோற்றர் குழுவின் செயற்கைக் கிரகமாகத் தொழிற்பட்ட அதன்'வேர்க்கஸ் இன்டர் நஷனல்' எனப்படுவதனதும் பாத்திரத்தினை முழுமையாக அம்பலப்படுத்தியது. 1985-86ல் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினை நாசமாக்கும் அதன் பிரகடனப் படுத்தப் பட்ட இலக்கு தோல்வி கண்டதைத் தொடர்ந்து, சுலோற்றர் குழு சோவியத் யூனியனுக்குள்ளும் அனைத்துலகத்தொழிலாளர் வர்க்கத்தினுள்ளும் அதன் வளர்ச்சி கண்டுவரும் செல்வாக்கினையும் ஆதரவையும் தடைசெய்ய ஒரு ஸ்டாலினிச பப்லோவாத சக்திகளை'மறு அணிதிரட்டும்' முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

நான்காம் அகிலம், பப்லோவாத சந்தர்ப்பவாதத்திற்கு எதிராக நா.அ.அ.கு. நடாத்திய நீண்டநெடும் போராட்டம் நிலை நாட்டியுள்ள அத்திவாரத்தின் மேல் கட்டியெழுப்பப்படும். வேறு அடிப்படைகள் கிடையாது. நான்காம் அகிலத்தினை கட்டியெழுப்புவது சகல சந்தர்ப்பவாதிகளும் காட்டியது போல் மத்தியவாதிகளின் 'மறுஅணிதிரள்வின்' மூலமன்றி நிசட்ரொட்ஸ்கிச வேலைத்திட்டத்தினை ஏகாதிபத்தியத்தின் அரசியல் ஏஜன்டுகள் விநியோகித்துள்ள போலிகளில் இருந்து தொடர்ந்து பிரித்து வைப்பதன் மூலமும் பிரிகோட்டினை வரைவதன் மூலமுமேயாகும்.

அனைத்துலகத் தொழிலாள வர்க்கத்தின் எதிர்காலம், சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியாக நான்காம் அகிலத்தைக் கட்டி எழுப்பும் போராட்டத்திலேயே தங்கியுள்ளது. புறநிலை நிலைமை நேரடியாக முன்வைத்துள்ள பணி இதுதான். அனைத்துலகத் தொழிலாள வர்க்கத்தின் ஒன்றுபட்ட நடவடிக்கை மூலம் முதலாளித்துவ அமைப்பினைத் தூக்கி வீசுவதன் மூலம் மட்டுமே மூன்றாம் ஏகாதிபத்திய யுத்த மிரட்டலுக்கும், அணுவாயுத பேரழிவுக்கும் முற்றுப்புள்ளி வைக்க முடியும். ஆனால் இந்த ஒன்றிணைவினை நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் தலைமையின் கீழ் கட்டி எழுப்புவதன் மூலம் மட்டுமே சாதிக்க முடியும்.

இம்மகாநாடு எங்குமுள்ள தொழிலாளர், இளைஞருக்கு விடுக்கும் அழைப்பு இதுதான்:- தயவுசெய்து நான்காம் அகிலத்தின் பதாகையின் கீழிணைந்து சோசலிசப் புரட்சியின் உலகக்கட்சியைக் கட்டி எழுப்புங்கள். எல்லாவற்றுக்கும் மேலான நடவடிக்கையாக முதலாளித்துவ அமைப்பினைத் தூக்கிவீசிஅது மனிதநாகரீகத்தினை அழிக்கும் அச்சுறுத்தலை அடியோடு ஒழித்துக்கட்டுங்கள்.


## பேர்லின் உலகத் தொழிலாளர் மகாநாட்டு பிரசுரங்கள்

★ ஏகாதிபத்திய யுத்தத்தையும் காலனித்துவத்தையும் எதிர்!
(நா.அ.அ.கு,வின் விஞ்ஞாபனம்) விலை 20/-

★ ஆகஸ்ட் சதியின் பின்னர் சோவியத் யூனியன் எங்கே செல்கிறது? விலை 25/-

★ பேர்ளின் உலக மகாநாட்டின் முனநோக்கு. விலை 30/-

கிடைக்குமிடம்:
90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை, கொழு பு-10.






வாசியுங்கள் :
முதலாளித்துவத்தின் மரண ஓலமும், நான்காம் அகிலத்தின் பணிகளும்

## இடை மருவு வேலைத் திட்டம்

விலை— 1ல-



## தொழிலாளர் பாதை
### சந்தாதாரர் ஆகுங்கள்!

அஞ்சல் கட்டணம் உட்பட
''தொழிலாளர் பாதை'' சந்த விபரம்:
1 மாதம் — ரூ. 6.00 3 மாதம் ரூ—. 12.00
6 மாதம் — ரூ. 36.00 1 வருடம் — ரூ. 72.00

பெயர்: ..............................................
முகவரி : ..............................................
சந்தா காலம் : ..................ரூ..................சதம்..........

சந்தாப் பணத்திற்கான அஞ்சல் அல்லது காசு கட்டளையுடன் நிரப்பிய இப்பத்திரத்தை அனுப்பி வைக்க வேண்டிய

முகவரி:
நிர்வாகி,
''தொழிலாளர் பாதை''
இல. 90, 1-வது மாளிகாகந்தை ஒழுங்கை,
கொழும்பு — 10


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தோட்டப் பகுதி பயங்கரங்களுக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லாள—ஒடுக்கப்படும் மக்கள் மீது திணிப்பதே.''

இந்தப் பிற்போக்கு ஆத்திர மூட்டும் இயக்கத்தினை முன்னெடுத்துச் செல்ல கொலைகார யூ. என். பி. அரசாங்கத்தின் அமைச்சரும் ஏகாதிபத்திய கையாளுமான எஸ். தொண்டமான் விடுதலைப் புலிகள்இயக்கத்துடன் நடாத்தவிருந்த பேச்சுவார்த்தையை ஒரு நல்ல சாட்டாக்கிக் கொண்டுள்ளது. தொண்டமானின் பிற்போக்கு துரோகத்தினை உரிய முறையில் பயன்படுத்திக் கொண்ட யூ. என். பி. அரசாங்கமும் சி. ல, சு. க. ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி முதலான முதலாளித்துவ இனவாதக் கட்சிகளும் தொண்டமான் 'மலைய நாட்டை' அமைக்கப் போகின்றார் என்ற இனவாதக் கூச்சலில் குதித்துள்ளன.

யூ. என். பி. அரசாங்கத்தினதும் மற்றும் முதலாளித்துவக் கும்பல்களதும் இலக்கு நன்கு தெளிவானது. தோட்டப் பகுதியில் இலட்சோபலட்சம் தொழிலாளர்களை இரத்தக் களரியில் மூழ்கடிப்பதன் மூலமும் வட — கிழ்மாகாண தமிழ் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான இனவாத யுத்தத்துடன் சேர்ந்து தோட்டத் தொழிலாளர்களுக்குஎதிரான இனவாதத்தினையும் ஒன்றுடன் ஒன்று பிணைப்பதன் மூலம் நாடு முழுவதிலும் உள்ள தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களை தீப்பிளம்பினுள் தள்ளுவதே. இவை ஏகாதிபத்திய காலனித்துவ சுரண்டலை ஊர்ஜிதம் செய்யப் பெரிதும் அவசியமாகியுள்ளது.

தோட்டத்துறையை ஏற்கனவே 22 தனியார் கம்பனிகளிடம் ஒப்படைக்கும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன. ஏகாதிபத்திய பன்னாட்டுக் கம்பனிகளும், மற்றும் வெளிநாட்டு உள்நாட்டுக் கம்பனிகளும் இவற்றை விழுங்கிக் கொள்ள துடித்து வருகின்றன. இந்தியாவுக்கு நாடுகடத்த யூ.என்.பி. அரசாங்கம் முடிவு செய்திருந்த ஒரு இலட்சம் தோட்டத் தொழிலாளர்களுடன் இன்னும் இரண்டு இலட்சம் தொழிலாளர்களை அவர்களது குடும்பத்துடன் தோட்டங்களில் இருந்து வெளியேற்ற முதலாளித்துவ அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இந்தத் தொழிலாளர்களின் கோடானு கோடி சேமலாப நிதியையும் இந்த அரசாங்கம் ஏப்பமிட்டு அவர்களுக்கு நாக்கிலும் ஒட்டாத ஒரு 'கொடுப்பனவை' வழங்கத் தயாராகி வருகின்றது. தோட்டத்துறையில் உண்மையில் இந்தத் தனியார்மயமாக்கம் ஒரு மாபெரும் மக்கள் படுகொலை இயக்கமாகவே இடம்பெறப் போகின்றது.

இந்த இனவாதக் கூச்சல்களுக்கு மத்தியில் புகையிரதம், அரசாங்க வங்கிகள் மற்றும் எஞ்சியுள்ள அரசாங்கத் துறைகளை மூடும் நடவடிக்கைகளை தொடர்ந்து செய்ய யூ.என்.பி. அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இந்த வேலைத் திட்டத்தினை பற்றி முதலாளித்துவ 'ஐலன்ட்' (ஜனவரி-26) பத்திரிகை குறிப்பிடுகையில் சிபார்சு செய்யப்பட்டுள்ள 'சீர்திருத்தங்களை' நடைமுறைப்படுத்தும் வரையில் உதவி வழங்க வேண்டாம் என பெப்ரவரியில் பாரிசில் கூடும் 'உதவி வழங்கும் குழுவிற்கு' உலகவங்கி அறிவித்துள்ளது என்றது.

உலக வங்கியினது நிபந்தனைகளின்படி தோட்டத்துறை. அரச வங்கிகள், புகையிரதசேவை தனியார்மயமாக்கப்படவேண்டியுள்ளது. வரவு செலவுத் திட்டச் செலவுகள் மொத்தத்தேசியஉற்பத்தியில் நூற்றுக்கு 8%மாக குறைக்கப்படவேண்டும். வட்டி வீதம் அதிகரிக்கப்பட்டு ரூபாமதிப்பிறக்கம் செய்யப்படவேண்டும். இந்த அரச செலவின வெட்டும், ரூபா மதிப்பிறக்கமும் விலைவாசிகளை உயர்த்துவதோடு எஞ்சியுள்ள சேமநல சேவைகளையும் ஒழித்துக் கட்டச் செய்யும். இதனடிப்படையில் அற்ப சொற்ப கொடுப்பனவுடன் தொழிலாளர்களை தொழில் ஆணையாளரின் அனுமதியுடன் வேலை நீக்கம் செய்ய இது காறும் இருந்துவந்த தொழிற்சட்டங்களைக் கூட நீக்கும்படி உலக வங்கி பிரேமதாச அரசாங்கத்திடம் கேட்டுள்ளது.

இந்த கொடிய தாக்குதல்கள் தோட்டப்புற, நகர்புற தொழிலாளர்களின் கைத்தொழில், அரசியல் சக்தியை ஒன்றிணைத்து. வட-கிழ் மாகாண ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்தினரையும், கிராமப்புற ஏழைகளையும் அணிதிரட்டுவதன் மூலம் அனைத்துலகத் தொழிலாள வர்க்கத்தின் ஐக்கியத்தை கோரவேண்டும். அதன் மூலம் பிரேமதாச அரசாங்கம் தலைமையிலான முதலாளித்துவ அரசாங்கத்துக்கு எதிராக அணிதிரளும் பணி தீர்க்கமாகியுள்ளது.

## வேலை நிறுத்தம்

தோட்டத் தொழிலாளர்கள் இடத்துக்கு இடம் தமது தயார் நிலையை ஏற்கனவே வெளிக்காட்டிக் கொண்டுள்ளனர். பசறை, லுணுகல, மடுல்சீமை பகுதிகளில சுமார் 25,000 தொழிலாளர்கள் பொலிஸ் அடக்குமுறைக்கு எதிராக வேலைநிறுத்தத்தில் இறங்கியதைத் தொடர்ந்து ஸ்பிரிங்வலி பகுதியில் மேலும் 10,000 தொழிலாளர்கள் தோட்ட நிர்வாகத்தின் ஆத்திரமூட்டலுக்கு எதிராக வேலைநிறுத்தம் செய்தனர். அவ்வாறே அரச வங்கிகளிலும் புகையிரத சேவையிலுமுள்ள தொழிலாளர்கள் தனியார் மயமாக்கத்தின் அழிவுக்கு எதிர்ப்புக் காட்டி வருகின்றனர். இந்ததொழிலாளர்களை தனிமைப்படுத்தவும் ஆத்திரமூட்டலுக்கு அடிபணியச்செய்யவும் சமசமாஜ, நவசமசமாஜ கம்யூனிச, இ. தொ. கா. வின் துரோக தலைமைகள் செயல்பட்டு வருகின்றன.

தொண்டமான் — செல்லச்சாமி தலைமை தோட்ட தனியார் மயமாக்கத்துக்கு பூரண ஆதரவு வழங்கி வருவதுடன் மட்டுமன்றி, அதை எதிர்த்துக்கிளம்பும் தமது சொந்த தொழிற்சங்க அங்கத்தவர்களைஅரச ஒடுக்குமுறைக்குப் பலியிடவும் தொழிற்படுகின்றனர். தோட்டங்களில் பொலிசாரின் தலையீட்டினால் தொழிலாளர் போராட்டங்கள் வெடிக்கவும், அதனால் பொருளாதாரத்திற்கு கெடுதி ஏற்படவும் இடமிருப்பதால் கைது செய்யப்பட வேண்டியவர்களின் பெயர்ப் பட்டியலை தம்மிடம் ஒப்படைக்குமாறும் அவர்களைப் பொலிசாரிடம் பிடித்துக் கொடுக்க தாம் தயாரெனவும் தொண்டமான் பதுளை பொலிஸ் அதிபருக்குத் தொலைபேசியில் தெரிவித்துள்ளதாக இ. தொ. கா. உப தலைவர் ராஜன் எமது நிருபரிடம் தெரிவித்தார்.

சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களைப் பார்வையிடச் சென்ற மற்றோர் துரோகியான எஸ். செல்லச்சாமி குற்றச்சாட்டு உண்டா இல்லையா என ஆராயப்பட்டு அவர்களுக்கு எதிராக வழக்கு. தாக்கல் செய்யப்படும் எனத் தெரிவித்துள்ளதாகவும் ராஜன் மேலும் கூறியுள்ளார்.

தோட்டத் தொழிலாளர்களின் சந்தாப் பணத்தினாலும் யூ. என். பி. அரசாங்கத்திடமிருந்து கிடைக்கும் அமைச்சர் பதவி லஞ்சம்களாலும் கொளுத்துப் போயுள்ள தொண்டமான்-செல்லச்சாமி தலைமையும் மற்றும் பிராந்திய இ.தொ.கா. தலைவர்களும் ஒடுக்குமுறை முதலாளித்துவ அரசின் பொலிஸ் காரர்களாகி உள்ளனர். 4இலட்சம் அங்கத்தினர்களை கொண்டிருந்த இ. தொ. கா.வில் இன்று 186,000 அங்கத்தினர்கள் மட்டுமே உள்ளனர். தொண்டமான்-செல்லச்சாமி முதலாளி வர்த்தகர்களாகியுள்ளனர். இ. தொ. கா. ஒரு தொழிற்சங்கமாக இயங்குவதை அடியோடு ஒழித்துக் கட்டுவதைவிட வேறெந்தவொரு பணியையும் இத்துரோகத் தலைவர்களால் செய்ய முடியாது.

இதற்கிடையே தமிழர் விரோத இனவாதிகளின் 'கரத்தையில்' நவசமசமாஜிஸ்டுகள் சவாரி செய்யத் தொடங்கியுள்ளனர். ஹிந்தகல தோட்டப் பணம் கொள்ளை புலிகளின் வேலை எனவும், 1 இலட்சம் தோட்டத் தொழிலாளர்களை வடமாகாண காட்டுப் பகுதியீல் குடியமர்த்த தொண்டமானுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடைபெறுவதாகவும் இவர்கள் கூச்சல் போட்டு வருகின்றனர். ஜனவரி 22ம் திகதி டீமெல் பார்க்கில் அனுர பண்டாரநாயக்க, லலித் அத்துலத்முதலி, காமினி திசாநாயக்கவுடன் ஒருமேடையில் தோன்றியதன் மூலம் நவ சமசமாஜ செயலாளர் விக்கிரமபாகு கருணாரத்ன இந்த இனவெறி பிரச்சாரத்தில் பங்கு கொண்டார். இதற்கிடையே சமசமாஜ - கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள முதலாளித்துவ சி. ல. சு. க. வுடன் மட்டுமல்ல லலித் அத்துலத் முதலி, காமினி திசாநாயக்காவுடனும் கூட்டுச் சேர வேண்டும் எனக் கோரும் தமது 'சுயாதீன' பிரச்சார இயக்கத்தினை ஜனவரி 23 புதிய நகர மண்டப கூட்டத்தின் மூலம் ஆரம்பித்துள்ளனர்.

சோவியத் யூனியனின் ஸ்டாலினிச அதிகாரத்துவ கும்பல் கொம்பிரதோர்' முதலாளிகளாக மாறி தொழிலாள வர்க்கத்தின் வெற்றியை ஏகாதிபத்தியவாதிகளுக்கு பலியிட்டதைப் போல இந்தப் பிற்போக்கு தொழிற்சங்க அதிகாரத்துவங்களும் தொழிலாளர்களின் அமைப்பு உரிமைகளை ஏகாதிபத்தியவாதிகளுக்கும் அவர்களின் கைக்கூலி முதலாளித்துவ ஆட்சியாளர்களுக்கும் பலிகொடுக்க தொழிற்படுகின்றனர்.

இந்தத் துரோகிகள் தமக்கு எதிராக நின்று கொண்டுள்ளார்கள் என்பதை தொழிலாள, ஒடுக்கப்படும் மக்கள் புரிந்து கொள்வதும் புதிய புரட்சிகர மூலோபாயம், புதிய புரட்சித் தலைமையின் கீழ் போராட்டத்தில் குதிக்க தீர்மானம் செய்ய வேண்டும் எனவும் நாம் வேண்டுகின்றோம். தொழிலாளர்களை முதலாளித்துவ அரசாங்கத்துக்கும் அரசுக்கும், முதலாளிகளுக்கும் காட்டிக் கொடுக்கும் இத் தலைமைகளுக்கு எதிராக கிளர்ந்து எழும்படியும் போராட்டத்தினை ஒழுங்கு செய்ய இணையுமாறும் நாம் சகல தொழிலாளர்களையும் வேண்டுகின்றோம்.

★ தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான அரச ஒடுக்குமுறையை நிறுத்து! கைது செய்யப்பட்ட சகல தொழிலாளர்களையும் நிபந்தனையின்றி விடுதலை செய்! தோட்டத்துறையில் அமுல் செய்யப்பட்டுள்ள சகல ஒடுக்குமுறைச் சட்டங்களையும் நீக்கு! எனக் கோரும் போராட்டத்தில் தொழிலாள வர்க்கம் உடன் ஈடுபடவேண்டும்.

★ தோட்டங்கள், வங்கிகள், புகையிரத சேவை மற்றும் அரச துறைகளுக்கு தனியார்மயமாக்கத்தினால்தொடுக்கப்படும் தாக்குதல்களைத் தோற்கடிக்க பொதுவேலை நிறுத்த பிரச்சாரத்தில் ஈடுபடுமாறு நாம் தொழிலாள வர்க்கத்தினை வேண்டுகின்றோம்.

★ வட-கீழ் மாகாண தமிழ் தேசிய இனத்தினருக்கு எதிரான யுத்தத்தினை நிறுத்து! கிராமப்புற படுகொலைகளை நிறுத்து! சகல அரசியல் கைதிகளையும் நிபந்தனையின்றி விடுதலை செய்! என்றகோரிக்கைகள் தொழிலாள வர்க்க கோரிக்கைகளுள் உள்ளடங்க வேண்டும்.

இப்போராட்டத்தினை சகலவேலைத்தலங்கள், பக்டரிகிராமப்புறங்கள் தொழிற்சங்க கிளைகள், வசிப்பிடங் எங்கும் முன்னெடுக்குமாறும் பிரேரணைகள் நிறைவேற்று! இப்போராட்டத்துக்கு குறுக்கே நிற்கும் தலைமைகள் உள்ள இடங்களில் சுயாதீன போராட்ட கமிட்டிகள் அமைக்குமாறும் நாம் வேண்டுகின்றோம்.

இப்போராட்டம் யூ. என். பி. அரசாங்கத்தினை வெளியேற்றி, ஏகாதிபத்திய சொத்துக்களையும் முதலாளித்துவ கைத்தொழில், தோட்டங்கள், வங்கிகளை தொழிலாளர் ஆதிக்கத்தின் கீழ் தேசியமயமாக்கும் தொழிலாளர்—விவசாயிகள் அரசாங்கத்தை — இலங்கை — தமிழ்ஈழம் சோசலிச குடியரசினை நிறுவும் போராட்டமாகும்.

இந்த வேலைத்திட்டத்தினை கலந்துரையாட நா. அ. அ. கு.வின் இலங்கைப் பகுதியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மார்ச் 22ல் கொழும்பு பொது நூல் நிலைய கேட்போர் கூடத்தில் கூட்டும் 'தொழிலாளர் பேராளர் மகாநாட்டில்' கலந்து கொள்ளுமாறு வர்க்க நனவு கொண்ட சகல தொழிலாளர், இளைஞர், மாணவர்கள், ஒடுக்கப்படும் மக்களை வேண்டுகின்றோம்.

---

## கொக்கட்டிச் சோலை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி).

கப்பட்டதோடு அதன் விபரங்கள் பத்திரிகையாளர் மகாநாட்டிலும் சமர்ப்பிக்கப்பட்டது. உண்மையில் இது கடைவாய் இரத்தம் துடைக்கும் நடவடிக்கையாக இடம்பெற்றுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் ஆயுதப்படைகளை வடக்கு-கிழக்கிலிருந்து வாபஸ்பெறும் போராட்டத்திற்குஆதரவாக எந்தவொருபோராட்டத்தையும் தொழிலாள வர்க்கத்துள்ளே முன்னெடுப்பதற்கு மாறான சமசமாஜ, நவசம சமாஜ, 'கம்யூனிச, இ.தொ.கா தலைமைகளின் நடவடிக்கைகள் இனவாத யூ.என்.பி. அரசாங்கத்தின் ஆயுதப்படைகளின் வெறியாட்டங்களைப் பலப்படுத்த மட்டுமன்றி இந்தப்படுகொலைகளின் நிச நிலைமையை தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களிடையே முன்வைப்பதற்கும் தடையாக உள்ளது.

---

## ஏகாதிபத்திய தலையீட்டுக்கு...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

முதல்தரமான ஏஜன்டுகளாக இப்படி செயற்படுகின்றனர்.

தொழிலாள வர்க்கம் அனைத்துலகவாத வர்க்க நடைமுறையின் அடிப்படையில் ஏகாதிபத்திய, காலனித்துவ சுரண்டலுக்கும், இனவாதப் பிளவுகளுக்கும் எதிராக அணிதிரள்வதைத் தடுத்து, சிங்கள இனவாதக்குட்டையில்நாறும் இந்த ஏஜன்டுகளை தொழிலாள வர்க்கத்திற்கு அம்பலப்படுத்துவதும் விரட்டியடிப்பதும் அவசியம். தொழிலாள வர்க்கம், முதலாளித்துவ கட்சிகளில் இருந்து அரசியல் ரீதியிலும் அமைப்புரீதியிலும் சுயாதீனமாகுவதும், அனைத்துலகத் தொழிலாள வர்க்கத்துடனும் கிராமப்புற வறிய விவசாயிகளுடனும் புரட்சிகர உறவை நிர்மாணிப்பதும் அவசியம். அதன்மூலம் ஏகாதிபத்தியச்சார்பு முதலாளித்துவ ஆட்சியை தூக்கிவீசி, தென் ஆசிய ஐக்கிய சோசலிச குடியரசின் பாகமாக இலங்கை-தமிழ்ஈழம் ஐக்கிய சோசலிசக் குடியரசினை கட்டியெழுப்ப வேண்டியது அவசியம். இது நிறைவேற்றப் படுவதனால் மட்டுமே தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணயஉரிமையும் கிராமப்புற ஏழைகளின் ஜனநாயக உரிமையும் பேணிக் காக்கப்படும். தொழிலாள வர்க்கம் இப்பாதையில் காலடி வைப்பதைத் தடுக்க ந. ச. ச, கட்சித் துரோகிகள் தம்மால் ஆனதை எல்லாம் செய்கின்றனர்.

இச்சந்தர்ப்பவாதிகளை விரட்டியடித்து, தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை பாட்டாளிவர்க்க அனைத்துலகவாதத்தின் அடிப்படையில் அணிதிரட்டப் போராடும், நா. அ. அ. கு. வின் ஒரு பாகமாக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினை கட்டியெழுப்பும் அத்தியாவசிய கடைமையை நிறைவு செய்ய வேண்டும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வொர்குட்டா சுரங்கத் தொழிலாளர்களை ஆதரியுங்கள்

ஏகாதிபத்திய யுத்தக்குக்கும் காலனித்துவத்துக்கும் எதிரான பேர்ளின் மகாநாடு வொர்குட்டா சோவியத் சுரங்கத் தொழிலாளர்களுக்கு உதவிகோரி அனைத்துலக பிரச்சார இயக்கத்தை தொடுப்பதென ஏகமனதாக முடிவு செய்தது. இந்த முக்கியமான பிரச்சாரத்துக்கு அமெரிக்கா, ஐ ரோப்பா, அவுஸ்திரேலியாவில் ஆதரவு கிடைக்கத் தொடங்கியுள்ளது. இதற்கு ஆதரவாக ரோல்ஸ் றோயிஸ் தொழிலாளர்களின் பொறியியல் தொழிற் சங்கத்தின் லீவ்ஸ்டன் கிளை பிரேரணை நிறைவேற்றியுள்ளதோடு 50 பவுண்களையும் வழங்கியுள்ளது. தேசிய சுரங்கத் தொழிலாளர் சங்கமும் இத்தகைய ஆதரவை வழங்கியுள்ளது. இங்கிலாந்தில் பக்டரி கதவுகளிலும், சுரங்க வாசல்களிலும் நூற்றுக்கணக்கான பவுண்கள் திரட்டப்பட்டுள்ளன.

100,000 சுரங்கத் தொழிலாளர்களும் அவர்களின் குடும்பத்தினரும் வொர்குட்டாவில் வசிக்கின்றனர். சோவியத் யூனியனின் தகர்வும் மத்தியமயமாக்கப்பட்ட பொருளாதாரத்தின் சரிவும் இத்தகைய தூர இடங்களுக்கு அவசியமான விநியோகங்களை தடைப்படச் செய்துள்ளது. இங்கு குளிர் காலத்தில் குளிர் 0.5 பரனைட்டுக்கு கீழாக வீழ்ச்சிகாண்கிறது. இந்தவொர்குட்டா சுரங்கத் தொழிலாளர்கள் மிகவும் அவசியமான வைத்திய, மருந்து விநியோகங்களை வழங்குமாறு உதவி கோரியுள்ளனர். ஜனவரி 2ல் ருஷ்ய ஜனாதிபதி விலைக்கட்டுப்பாட்டை நீக்கியதில் இருந்து 'பார்மசி'களில் மருந்து தட்டுப்பாடு நிலவுகின்றது. விலைகளும் நான்கு மடங்கு அதிகரித்துள்ளது. சோவியத் பொருளாதாரத்தினை சிதறடித்ததன மூலம் இலாபம் அடைந்த அதிகாரத்துவங்களும், முதலாளித்துவ 'மாபியா' காரர்களும். உள்ள சகல மருந்துப் பொருட்களையும் பதுக்கியுள்ளனர். இதனால் தொழிலாளர்களுக்கு எதுவும் கிடைப்பதாய் இல்லை. அரசாங்கங்களாலும் உதவி நிறுவனங்களாலும் அனுப்பப்படும் நன்கொடை உணவுப் பொருட்கள், மருந்துகள் கூடக் களவாடப்படுகின்றன. அல்லது கறுப்புச் சந்தையில் உச்ச விலைக்கு விற்பனையாகின்றன.

'நியூயோர்க் டைம்ஸ்' பத்திரிகைக்கு டாக்டர் மொன்ட்கோமேரி அளித்த பேட்டியில் 'ஜனவரியில் இருந்து ருஷ்யாவின் மூன்றில் ஒரு பங்கு ஆஸ்பத்திரிகளுக்கு வைத்திய விநியோகங்கள் அடியோடு இல்லை. கல்லடைசல் போன்ற சத்திர சிகிச்சைகள் சவர அலகினால் செய்யப்படும் இடங்களும் சோவியத் யூனியனில் உண்டு.'' என்றுள்ளார்.

அனைத்துலகக் குழுவும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் பெரிதும் சாதாரணமாக பயன்படுத்தப்படும் மருந்துகளை சேகரிக்கவும் அவற்றை கொள்வனவு செய்யும் நிதிகளை திரட்டியும் வருகின்றன. சுரங்கத் தொழிலாளர்களுக்குஇவை நேரடியாக சென்றடைவதை நிச்சயப்படுத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன

உங்கள் உதவி நிதிகளையும் மருந்து பொருட்களையும் 1992 பெப்ரவரி 29க்கு முன்னதாக கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் வேண்டுகின்றது.

ஆனந்த வக்கும்புர,
வொர்குட்டா சுரங்கத் தொழிலாளர்
உதவி நிதி:
90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை,
கொழும்பு- 10.

# றொஜர் கவுத்ராவை பேணு!


றொஜர் கவுத்ரா

பேர்ளினில் நடைபெற்ற உலகத் தொழிலாளர் மகாநாட்டில் அமைக்கப்பட்ட அனைத்துலக தொழிலாளர் பாதுகாப்பு கமிட்டி வேட்டைக்குள்ளாகியுள்ள அமெரிக்க கிரேஹவுண்ட் பஸ் சாரதி றொஜர் கவுத்ராவை பேணுவதற்கு நான்காம் அகிலத்தின் அனைத்துலகக்குழுவின்கிளைகள்உள்ள நாடுகளில் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளது.

கருங்காலிகளின் பஸ்சுக்கு துப்பாக்கிப் பிரயோகம் செய்தார் என்ற பொய் குற்றச்சாட்டின் பேரில் கவுத்ரா குற்றவாளியாக்கப்பட்டுள்ளார். கவுத்ராவின் மேன்முறையீடு தோல்வியடையின் அவர் 6 வருடங்கள் சிறைத் தண்டனைக்குள்ளாவார். கவுத்ரா சம்பவம், மனித உரிமைகள் பற்றி மோசடி கூச்சல் போடும் ஏகாதிபத்திய மையத்தில் தொழிலாளர்ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக உக்கிரம் கண்டு வரும் ஒடுக்குமுறைக்கு நல்ல சாட்சி.

கவுத்ரா இந்த வேட்டையையும் தொழிற்சங்க அதிகாரத்துவங்களின் கடைகெட்ட காட்டிக் கொடுப்புக்களையும் அம்பலப்படுத்தவும், உலகத் தொழிலாளர் வர்க்கத்தினை அணிதிரட்டும் அனைத்துலக சுற்றுப் பயணத்தில் ஈடுபட்டுள்ளார். பெப்ரவரி 15 தொடக்கம் மார்ச் 1 வரை அவர் அவுஸ்திரேலிய சோசலிச லேபர் லீக்கின் பிரச்சாரத்தில் பங்கு கொள்கின்றார்.

பெப்ரவரி 28ல் அனைத்துலகக் குழுவின் சகல கிளைகளும் ஊர்வலங்கள், மறியல்கள் நடாத்துவதன் மூலம் கவுத்ராவைப் பேணும் பிரச்சாரத்தினை முன்னெடுக்கவுள்ளன. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அன்றைய தினம் கொழும்பில் ஊர்வலம் நடாத்தவுள்ளது. இந்தப் பிரச்சாரத்துக்கு ஆதரவளிக்குமாறு நாம் சகல தொழிலாளர், இளைஞர்கள், ஒடுக்கப்படும் மக்களை வேண்டுகின்றோம்.

# எட்டியாந்தோட்ட: லவண் தோட்ட தொழிலாளர் வேலை நிறுத்தம்

எட்டியாந்தோட்டை லவண் தோட்ட மேற் கணக்கைச் சேர்ந்த தொழிலாளர் ஜனவரி 2ம் திகதியில் இருந்து வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர். ஆண்டுதோறும் ஜனவரி 1ம் திகதி சமய வழிபாடுகளுக்காக தொழிலாளர்கள் நேரத்துடன் வேலைவிட்டுச் செல்வது வழக்கமாக இருந்து வந்தது. இவ்வாண்டு தோட்ட நிர்வாகி இதன் பேரில் தொழிலாளர்களின் வேலைநாளில் அரைநாளை வெட்டிக்கொண்டுள்ளதை எதிர்த்தே இவ் வேலை நிறுத்தம் ஆரம்பமாகியுள்ளது.

இந்தச் சமய வழிபாடுகளுக்காக தொழிலாளர்கள் முன்கூட்டியே வேலைவிட்டுச் செல்லும் விடயம் தோட்ட நிர்வாகிக்கும், கண்டக்டருக்கும் தொழிற்சங்கத் தலைவர்களுக்கும் அறிவிக்கப்பட்டிருந்த நிலையிலும் இந்த வேலை நாள் வெட்டு இடம் பெற்றுள்ளது. வேலைநாள் வெட்டினை இரத்துச் செய்யும்படியும், தோட்ட நிர்வாகியையும் கண்ட்ராக்டரையும் விலக்கும்படியும் வேலை நிறுத்தம் செய்யும் தொழிலாளர்கள் கோரியுள்ளனர். அத்தோடு லவண் தோட்டத்தின் ஏனைய டிவிசன்களில் வேலை செய்யும் தொழிலாளர்களையும் இந்த வேலை நிறுத்தத்துக்கு ஆதரவளிக்கும்படி வேலை நிறுத்தம் செய்யும் தொழிலாளர்கள் கோரியுள்ளனர்.

நிர்வாகத்தின் ஆத்திரமூட்டும் நடவடிக்கைபற்றி 'தொழிலாளர் பாதை' நிருபருடன் பேசிய தொழிலாளர்கள் கூறியதாவது: ''ஏனைய வருடங்களில் கோவிலைச் சுத்தம் செய்ய இரண்டு தொழிலாளர்கள் தருவார்கள். இம்முறை அதுவும் கூடச் செய்யவில்லை. அதற்குப் பதிலாக எமது அரைநாள் வேலையை வெட்டியுள்ளது. தோட்ட நிர்வாகிகள் நாம் சாமி கும்பிடவும் இடமளிப்பதாய் இல்லை. இத்தகைய கேவலமான நிர்வாகிகள் எமக்குத்தேவையில்லை.'' என ஒரு பெண் தொழிலாளி குறிப்பிட்டார்.

இதே விதத்தில் நடந்துகொண்ட நிர்வாகிகள் தோட்டத் தொழிலாளர்களின் வேலைப்பளுவைக் கூட்டும் நடவடிக்கைகளிலும் இறங்கியுள்ளனர். காலை 6/30க்குப் பின்னர் வரும் தொழிலாளிகளுக்கு வேலை வழங்க மறுப்பதோடு தமக்குரிய வேலையை ஒரு தொழிலாளி செய்து முடித்தாலும் கூட மாலை. 2/30 வரை அவர்கட்டாயம்வேலைத்தலத்தில் இருந்தாக வேண்டும். வேலைக்கு அவசியமான உபகரணங்களை எடுத்து வரவோ அல்லது வேலைக் காலத்தில் 'லயன்'களுக்குப் போய்வரவோ தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய கெடுபிடி விதிமுறைகள் உலக வங்கித் திட்டத்தின் கீழ் இடம்பெற்று வரும் தோட்டத் தனியார்மயமாக்கத்தின் போது இடம்பெறும் சம்பள, வாழ்க்கைத் தர வெட்டுக்களுக்கான தயாரிப்புக்களாக, விளங்குகின்றது. யூ. என். பி. அரசாங்கத்தின் தனியார்மயமாக்கத்துக்கு ஆதரவு வழங்கும் துரோக இ. தொ. கா. தலைவர்களுக்கும், தனியார் மயமாக்கத்தின் பின்னர் வேலைநிறுத்தம் செய்வோம் எனக் கூறி அக்டோபரில் இடம்பெறவிருந்த அடையாள வேலைநிறுத்தத்தினைக் கூடக் கைவிட்ட ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கம் செங்கொடிச் சங்கம் போன்ற தலைமைகளுக்கும் எதிராக மாற்றுப் புரட்சித் தலைமையைக் கட்டி எழுப்ப புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருமாறும் அதன் பெருந்தோட்ட, கைத்தொழில் தொழிலாளர் சங்கத்தை கட்டி எழுப்புமாறும் வேண்டுகின்றோம்'

லவண் தோட்டதொழிலாளர் வேலைநிறுத்தத்தினதும் முழுத் தொழிலாள வர்க்கத்தினதும் எதிர்காலம் அதில் தங்கியுள்ளது.

## தெகிவளை புனித மரியாள் கல்லூரி: ஆசிரியர் இடமாற்றத்துக்கு எதிர்ப்பு

தெகிவளை புனித மரியாள் கல்லூரி ஆசிரியர்கள் இருவர் அங்கிருந்து மொரட்டுவைக்கு இடமாற்றம் செய்யப்பட்டதை எதிர்த்து பெற்றோர், ஆசிரியர், மாணவர்கள் வர்க்க நடவடிக்கை மூலம் கிளர்ந்து எழுந்தனர்.

எஸ். கே. கீர்த்தி, எம். ஏ. எஸ். பெரேரா என்ற திறமை வாய்ந்த கணித, விஞ்ஞான ஆசிரியர்களைப் பாடசாலை இழப்பதை எதிர்த்து அப்பாடசாலையைச் சேர்ந்த 17 ஆசிரியர்கள் ஜனவரி 16ல் வேலை நிறுத்தம் செய்தனர். மாணவர்களும் வகுப்புக்களைப் பகிஷ்கரித்தனர், ஜனவரி 15ல் இடம்பெற்ற பாடசாலை பெற்றோர் — ஆசிரியர் சங்க கூட்டத்தில் பேசிய இலங்கை ஆசிரியர் சங்க செயற்திறன் மிக்க உறுப்பினரும், புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக அங்கத்தவருமான எஸ். கே. கீர்த்தி, இந்த இடமாற்ற நடவடிக்கை இலவசக் கல்வியைத் துடைத்துக்கட்டும் உலகவங்கி, யூ. என். பி. அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தின் ஒரு பாகமாக இடம்பெற்றுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டினார். அக்கூட்டத்திற்கு வருகை தந்திருந்த 200 பெற்றோர்கள் தோழர் கீர்த்தியின் கருத்துக்களை ஆமோதித்தனர். அன்று காலை பு. க. க. வின் இலங்கை ஆசிரியர் சங்க அங்கத்தவர்களும், இளம் சோசலிஸ்டுகள் இயக்க உறுப்பினர்களும் இலங்கை ஆசிரியர் சங்க துணைச்செயலாளரும் பு. க. க. உறுப்பினருமான பாணி விஜேசிரிவர்தனாவும் இலவசக் கல்வி வெட்டுக்கு எதிராக பாடசாலை முன்றலில் மறியல் போராட்டம் நடாத்தினர். இதைச் சூழ பெருமளவிலான பெற்றோரும், மாணவர்களும் நின்று கொண்டிருந்தனர்.

இந்த இடமாற்றத்திற்கு எதிராக போராடும்படி இலங்கை ஆசிரியர் சங்க ஐயசிங்க தலைமையை இவர்கள் கேட்டுக்கொண்ட போதிலும் தலைமை அதற்கு மறுத்துவிட்டது. மறியல் போராட்டத்தில் பங்கு கொள்ளவும் உடன்படவில்லை.

எனினும் பு. க. க. அங்கத்தினர்களின் இடைவிடாத போராட்டம் காரணமாக இ. ஆ. ச. மத்திய குழு ஜனவரி 25ம் திகதி கூடியபோது புனித மரியாள் கல்லூரி ஆசிரியர் இடமாற்றத்திற்கு எதிராக ஏனைய தொழிற் சங்கங்களையும் அணிதிரட்டி இ. ஆ. ச மறியல்போராட்டம் நடாத்தவேண்டும்என்ற பிரேரணை நிறைவேறியது. பெப்ரவரி 8ல் இதற்கான ஆயத்தங்களை செய்ய தொழிற் சங்கங்களை அழைப்பதென முடிவு செய்யப்பட்டது.

திருத்தம் :

4-ம் பக்க அறிமுகத்தில் நிக் பீம்ஸ், அவுஸ்திரேலிய சோசலிச லேபர் லீக்கின் தேசிய செயலாளர் எனத் திருத்தி வாசிக்கப்படவேண்டும். நடுப்பக்கங்களில் திகதியை 1992 ஜனவரி 27 என திருத்தி வாசிக்கவும். ஆ—ர்.

கொழும்பு — 10. 1ஆவது மாளிகாகந்தை ஒழுங்கை, இலக்கம் 90, இடத்தில் வசிக்கும் ஆனந்தவக்கும்புறவினால் மஹரகம நாகஹவத்தை வீதி, 51ஆம் இலக்கத்திலுள்ள பியதாச அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org